பக்கங்கள்: 14

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 தை 20 செவ்வாய்க்கிழமை 04.02.2020 கதிர் 90

**இது இனி ரகசியம் அல்ல!**

நான் இப்பத்தியில் ஏற்கனவே பல தடவைகள் சுட்டிக்காட்டியபடி மைத்திரிபால சிறிசேனவுக்கு அரசியலில் கெட்டகாலமும், நெருக்கடியும் ஆரம்பித்து விட்டன தான் போலும். ஜனாதிபதிப் பதவியை விட்டு அவர் இறங்கிவிட்டமையால் பதவிக் காலத்தில் பக்கம் 02 »

# சுதந்திர தினத்தை தமிழர்கள் கரிநாளாக அனுஷ்டிப்போம்!

## யாழ்.பல்கலை கலைப்பீட மாணவர் ஒன்றியம் அழைப்பு




யாழ்ப்பாணம்,பெப்.04

எமது மண்ணில் நாம் சுதந்திரமாக வாழ்வதற்கு எமது தாயக மண்ணிலிருந்து இராணுவம் வெளியேற்றப்பட வேண்டும் என்பது உள்ளிட்ட தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்குச் சர்வதேச சமூகம் தீர்வைக் காண முன்வரவேண்டும் என வலியுறுத்தியும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் இன்று முன்னெடுக்கப் படும் ஆர்ப்பாட்டத்துக்கு வலுச்சேர்க்கும் வகையிலும் இன்றைய சுதந்திர நாளை கரிநாளாகப் பிரகடனப்படுத்தி யாழ்.பல்கலைக் கழகக் கலைப்பீட மாணவர் ஒன்றியம் அறிவித்துள்ளது. பக்கம் 03 »

## எமது பிள்ளைகள் எமக்கு வேண்டும்

திருமலையில் போராட்டம்




திருமலை,பெப்.04

திருகோணமலை மாவட்டத்தில் கையளிக்கப்பட்டும் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளைத் தேடியலையும் சங்கத்தினர், கிழக்கு மாகாண பக்கம் 03 »

## யாழ்.பல்கலை பேரவைக்கு 14 வெளிவாரி உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், பெப்.04

யாழ். பல்கலைக்கழகத்தின் ஆட்சி அதிகார சபையாகிய பேரவைக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள வெளிவாரி உறுப்பினர்களின் பெயர் விவரங்களை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு நேற்று வெளியிட்டுள்ளது.

எனினும் சிங்கள, முஸ்லிம் பிரதிநிதிகள் எவரும் இம்முறை பேரவையில் இடம்பெறவில்லை.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்ட பக்கம் 03 »

## வடக்கில் நான்கு இடங்களில் இராணுவச் சோதனைச் சாவடி

பஸ் பயணிகள் கடும் விசனம்



யாழ்ப்பாணம்,பெப்.04

வடக்கில் ஆனையிறவு, மாங்குளம்,புளியங்குளம், ஓமந்தை ஆகிய நான்கு இடங்களில் இராணுவச் பக்கம் 03 »

## உயர் நீதிமன்ற நீதியரசராக கோத்தாகொட பதவியேற்பு



கொழும்பு, பெப். 04

மேன்முறையீட்டு நீதி மன்றத்தின் தலைவர், நீதியரசர், ஜனாதிபதி சட்டத்தரணி யசந்த கோத்தா கொட பக்கம் 03 »

## பூஜித மனுவின் பிரதிவாதியாக மைத்திரியை பெயரிட அனுமதி

கொழும்பு, பெப். 04

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் முடிவுக்கு எதிராக, முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் மனுவின், பிரதிவாதியாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பெயரிட உயர்நீதிமன்றம் நேற்று அனுமதி வழங்கியது.

அப்போதைய ஜனாதிபதி தன்னைக் கட்டாய விடுப்பில் அனுப்பிய முடிவு அரசமைப்புக்கு பக்கம் 02 »

## கோழிகளை காப்பாற்ற சென்ற 3 பேர் குழிக்குள் விழுந்து சாவு!

கொழும்பு, பெப். 04

அவிசாவளையில் கைவிடப்பட்டிருந்த சுரங்கக் குழிக்குள் இறங்கிய மூவர் மூச்சு திணறல் காரணமாக உயிரிழந்த துயர் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

சுரங்கக் குழிக்குள் விழுந்த இரண்டு கோழி–களைக் காப்பாற்றச் சென்ற சென்றவேளையிலேயே அவர்க பக்கம் 03 »

## யாழ். விமான நிலையத்திலும் கொரோனா வைரஸ் சோதனை

கொழும்பு, பெப். 04

கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் யாழ்ப்பாண சர்வதேச விமான நிலையத்துக்கு வருபவர்களும் கடுமையான சோதனைகளுக்கு உட்படுத்தப்படுவார்கள் எனச் சுகாதார அமைச்சர் பக்கம் 03 »

## உலகில் மூன்றாவது உயரமான முருகன் சிலை மலையகத்தில்!



கொழும்பு, பெப். 04

தமிழ்க் கடவுளான முருகப் பெருமானுக்கு உலகிலேயே மூன்றாவது உயரமான திருவுருவச் சிலை மலையகத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

நுவரெ பக்கம் 03 »

## இரு மணி நேர மின்வெட்டு தீர்மானம் கைவிடப்பட்டது

கொழும்பு,பெப்.04

நாடு முழுவதும் தினமும் 2 மணித்தியாலயத்திற்கு மின்சார விநியோகத்தை சுழற்சிமுறையில் இடைநிறுத்துவதற்கு இலங்கை மின்சார சபையால் எடுக்கப்பட்ட தீர்மானம் கைவிடப்பட்டுள்ளதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் அமைச்சு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள் பக்கம் 03 »

# 6ஆம் திகதி கூடுகின்றது ஐ.தே.கவின் செயற்குழு!

கொழும்பு,பெப்.04

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் எதிர்வரும் 6ஆம் திகதிகட்சித்தலைவர்ரணில் விக்கிரமசிங்க தலைமையில்சிறிகொத்தாவில்நடைபெறவுள்ளது.

இந்தக்கூட்டத்தில்எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உட்பட அவருக்கு ஆதரவான உறுப்பினர்களும் கலந்துகொள்வார்கள் என அறியமுடிகின்றது.

கடைசியாகநடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தை இவர்கள் புறக்கணித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய தேசியக்கட்சிக்குள் ஏற்பட்டுள்ள குழப்பநிலை 90 சதவீதம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளநிலையில் – அடுத்த செயற்குழுக் கூட்டத்தின் பின்னர் பிரச்சினை முற்று பெறும் என அந்தக் கட்சியின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக்கட்சி தலைமையில் அமையவுள்ள பரந்தப்பட்ட அரசியல் கூட்டணியின் தலைமைப் பதவியையும், வேட்பு மனுக் குழுவின் தலைவர் பதவியையும் சஜித்துக்கு வழங்குவதற்கு ரணில் அணி இணக்கம் தெரிவித்துள்ளது.

எனினும்,புதியகூட்டணியின் செயலாளராக யாரை நியமிப்பது என்பதிலேயே தற்போது சிக்கல்நிலை உருவாகியுள்ளது.

ரஞ்சித் மத்தும பண்டாரவை நியமிப்பதற்கு சஜித் அணியும், ரவி கருணாநாயக்க, நவீன் திஸாநாயக்க, தயா கமகே ஆகிய மூவரில் ஒருவரை நியமிப்பதற்கு ரணில் அணியும் முயற்சிக்கின்றன.

இது தொடர்பில் இரு அணிகளுக்குமிடையில் நேற்றும் பேச்சுகள் தொடர்ந்தன.

இறுதி முடிவு எட்டப்பட்ட பின்னர் அது தொடர்பில் அங்கீகாரத்தைப் பெறுவதற்காகவே 6 ஆம் திகதி ஐ.தே.கவின் மத்தியகுழு கூடுகின்றது.

ஐ.தே.கவின் மத்திய செயற்குழுவிலிருந்து நீக்கப்பட்டிருந்த சரத் பொன்சேகா, ரோஸி சேனாநாயக்க, அஜித் பி. பெரேரா, இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் ஆகியோரை செயற்குழுவில் இணைத்துக்கொள்வது தொடர்பிலும் இதன் போது முடிவெடுக்கப்படும். (ஐ)

## பூஜித மனுவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விரோதமானது என அறிவித்து உத்தரவிடக் கோரி பூஜித இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான மூவர் கொண்ட நீதிபதிகள் குழுவின் முன் இந்த வழக்கு விசாரணை நேற்று நடைபெற்றது.

இதேவேளை, மைத்திரிபால தற்போது ஜனாதிபதியாக இல்லாததால் அவர் சார்பில் முன்னிலையாவதில்லையென சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்துள்ளது. (ஐ)

# ஸ்ரீ லங்கன் விமான சேவை முன்னாள் அதிகாரியுடன் அவரது மனைவியையும் கைது செய்யுமாறு உத்தரவு

ஸ்ரீ லங்கன் விமான சேவையின் முன்னாள் நிறைவேற்றதிகாரி கபில சந்திரசேன மற்றும் அவரது மனைவி பிரியங்கா நியோமாலி விஜேநாயக்க ஆகியோரை கைது செய்யுமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத்திற்கு சட்டமா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

இவர்களைக் கைது செய்வதற்காக நீதிமன்றத்தில் அறிக்கையிட்டு பிடியாணை உத்தரவைப் பெறுக்கொள்ளுமாறும் சட்டமா அதிபர் அறிவித்துள்ளார்.

இந்த இருவர் தொடர்பிலும் குற்றப்புலனாய்வுத் திணைக்களம் முன்னெடுக்கும் விசாரணைகளின் முன்னேற்றத்தைக் கவனத்திற்கொண்டு சட்டமா அதிபர் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

நிதித்தூய்தாக்கல் சட்டத்தின் கீழான குற்றச்சாட்டுக்களின் பேரில் கபில சந்திரசேன மற்றும் அவரது மனைவி பிரியங்கா நியோமாலி விஜேநாயக்க ஆகியோரை கைது செய்வதற்காக நீதிமன்றத்தில் விடயங்களைத் தெளிவுபடுத்துமாறு குற்றப்புலனாய்வுத் திணைக்களத் திற்குச்சட்டமாஅதிபர்பணிப்புரை விடுத்துள்ளார்.

ஸ்ரீ லங்கன் விமான சேவைக்கு எயார் பஸ்களைக் கொள்வனவு செய்வது தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட கொடுக்கல் – வாங்கலில் இடம்பெற்ற முறைகேடுகளை அடிப்படையாகக் கொண்டு இந்த விசாரணை முன்னெடுக்கப்படுகின்றது. (ஐ)

# திருகோணமலையில் கடலில் மூழ்கி மாணவன் உயிரிழப்பு!

திருமலை, பெப். 04

திருகோணமலை கடற்கரையில் நீராடிய மாணவன் கடலில் மூழ்கிப் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

திருகோணமலைபொது வைத்தியசாலைக்கு அருகிலுள்ள டைக் பீஸ் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 2.30 மணியளவில் மூன்று இளைஞர்கள் நீராடிக் கொண்டிருந்தபோது, ஒருவர் நீரில் மூழ்கிக் காணாமல் போயுள்ளார்.

மேற்படி மூன்று இளைஞர்களும் மரண வீட்டுக்குச் சென்று பின்னர் கடலில் குளிப்பதற்காகச் சென்றுள்ளனர். இதன்போது, ஒருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளார். இதனையடுத்து,பொலிஸ்கடல் பாதுகாப்புப் பிரிவினர் தேடுதல் நடத்தி ஒரு மணி நேரத்தின் பின்னர் சடலத்தை மீட்டுள்ளனர்.

உயிரிழந்தவர், 17 வயதுடைய ஜெரோம் எனவும், இவர் கடந்த வருடமே க.பொ.த.சாதாரணதரபரீட்சை எழுதியவர் என்றும் தெரியவருகிறது.

இளைஞனின் சடலம், திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் தற்போது வைக்கப்பட்டுள்ளது. (ஐ)

# மனோ தித்தவெல காலமானார்!



கொழும்பு, பெப். 04

கடந்த அரசின் காலத்தில், நல்லிணைக்கப் பொறிமுறைகளை ஒருங்கிணைப்பதற்கான செயலகத்தின் செயலாளர் நாயகமாகப் பணியாற்றிய மனோ தித்தவெல காலமானார். அவர் ஆஸ்திரேலியா வின்மெல்போர்னில் உள்ள ஒரு மருத்துவமனையில் காலமானார் என்று கூறப்படுகிறது. மனோ தித்தவெல, நிதி அமைச்சின் முன்னாள் மூத்த ஆலோசகராகவும் பணியாற்றியிருந்தார்.

# 512 கைதிகளுக்கு பொதுமன்னிப்பு

கொழும்பு, பெப். 04

இன்று கொண்டாடப்படும் சுதந்திர தினத்தை முன்னிட்டு 512 கைதிகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பொது மன்னிப்பு வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

அரசமைப்பின் 34 ஆவது பிரிவினால் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படியும் நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவின் பரிந்துரையின் பேரிலும் இந்தப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு விடுவிக்கப்பட்டவர்கள் திருட்டு, நம்பிக்கை மோசடி மற்றும் குடிபோதையில் வாகனம் ஓட்டுதல் போன்ற சிறிய குற்றங்களின் காரணமாக சிறைத்தண்டனை அனுபவித்து வருபவர்களாவர்.

வன்புணர்வு, பாலியல் துன்புறுத்தல்கள், கொள்ளை மற்றும் இலஞ்சம் கோருதல் போன்ற பெரிய குற்றங்களுக்காக தண்டனை பெற்றவர்கள் எவரும் இந்த பட்டியலில் இல்லை.

இந்த ஆண்டு ஜனவரி 31அன்றுசிறையில்இருந்த கைதிகளுக்கு மட்டுமே இந்தப் பொது மன்னிப்பு ஏற்புடையதாகும். பெப்ரவரி 04ஆம் திகதியே இவர்கள் விடுவிக்கப்படுவர் – என்றுள்ளது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவருக்குக் கிடைத்த சிறப்புரிமைகள் இப்போது அவருக்கு இல்லை.

ஜனாதிபதியாக இருந்த போது அவர் ஆற்றியவை, ஆற்றாதவை எல்லாவற்றுக்கும் எதிராக இனி வழக்குத் தொடர்வார்கள், தனிப்பட்ட முறையில் அவற்றுக்கு சட்டத்தரணிகளை ஏற்பாடுசெய்து, வழக்குகளுக்கு அனுப்பி, சட்டப் போர் நடத்தியே அவர் களைத்து விடுவார் என இப்பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன்.

அது ஆரம்பமாகிவிட்டது. பதவியில் இருந்து இடைநிறுத்தப்பட்டிருக்கும் – விளக்கமறியலில் இருக்கும் – பொலிஸ் மா அதிபர்பூஜிதஜயசுந்தரதொடர்ந்த வழங்கில் அவருக்கு (மைத்திரிக்கு) நோட்டீஸ் அனுப்ப உயர் நீதிமன்றம் உத்தரவிட்டு விட்டது.

இது மைத்திரிதன்தலையில் தானே மண் அள்ளிக்கொட்டிக் கொண்ட கைங்கரியத்தின் அடுத்த பக்கம்.

19ஆவது திருத்தம் வர முன்னர் ஜனாதிபதி பதவியில் இருக்கும்போது செய்த, செய்யாத எக்காரியத்துக்காகவும் யாரும், எப்போதும் வழக்குத் தொடர முடியாது என்பதே அரசமைப்பு சட்ட ஏற்பாடாக இருந்தது.

ஜனாதிபதியின் பதவிக் காலத்தை ஆறு ஆண்டுகளில் இருந்து ஐந்தாகக் குறைத்தல், ஜனாதிபதி பதவியை விட்டு இறங்கியதும் சட்ட விலக்களிப்பு (ஜனாதிபதிப் பதவிக் காலத்தில் ஆற்றிய, ஆற்றாத விடயங்கள் தொடர்பிலும்) நீங்குதல் முதலிய ஏற்பாடுகள் மைத்திரி ஜனாதிபதியாகப் பதவியேற்ற 2015 ஆம்ஆண்டில்அவரது வழிநடத்தலில் கொண்டுவரப்பட்ட 19 ஆவது அரசமைப்புத் திருத்தம் மூலமே நுழைக்கப்பட்டன.

அதன் விளைவுகளையே இப்போது அவரே சந்திக்கத் தொடங்கியிருக்கின்றார். இந்த விடயம் இன்னும் இறுக்கமாக அவரது கழுத்தைச் சுற்றிவளைக்கப் போகிறது என்கின்றன கொழும்பு அரசியல் வட்டாரங்கள்.

இப்போதும் அவர்தான் சுதந்திரக் கட்சியின் தலைவர். அதை வைத்துக்கொண்டு அரசியலில் அவர் அதிகம் ஆதிக்கம் செலுத்த முனைகிறார், பொது ஜன பெரமுனவுக்கு அடங்காமல் துள்ளுகின்றார் என்றெல்லாம் மொட்டுக் கட்சித் தலைமை எரிந்து கொண்டிருப்பதாகக் கேள்வி.

அதனால் அவர் தொடர்பில் இரண்டு முனை நகர்வை முன்னெடுத்துத் தமது ஒழுங்குக்கு –தமதுகட்டுப்பாட்டுக்கு–கொண்டு வர மொட்டுத் தலைமை தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது.

இன்னும் தெற்கில் தலைமுறை தலைமுறையாக சுதந்திரக் கட்சியை ஆதரித்து வந்த கணிசமான வாக்காளர்கள் இருக்கின்றார்கள். வரும் தேர்தலில் அக்கட்சி தனித்து நிற்குமானால் பத்து லட்சம் வாக்குகளையாவது எடுக்கும், ஒரு சில டசின் எம்.பிக்களையாவது பெற்றுக்கொள்ளும் என்று ஆய்வு வட்டாரங்கள் அரசுக்குத் தகவல் கொடுத்திருக்கின்றன.

இந்தப் பலத்தை வைத்துக் கொண்டுதான் சு.க. தலைவரும் கட்சியின் ஏனையோரும் சற்றும் 'மிதப்பில்' நடந்து கொள்கின்றார்கள் என்று எரிச்சல் மொட்டின் தலைமைக்கு.

அப்படி சு.க. தனித்து தேர்தலில் நிற்குமானால் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை ஈட்டுதல் என்ற மொட்டுக்கட்சியின் எதிர்பார்ப்பு நிரந்தரக் கனவாகிப் போய்விடும் என்பதும் மொட்டுத் தலைமைக்கு புரிகின்றதாம்.

அதனால்சு.க.தலைமையை, நிபந்தனைகள் போடாமல் அடங்கி நடக்க வைப்பதற்கும் தமது வழிக்குக் கொண்டு வரவுமே இந்த இரண்டு முனை அணுகுமுறை.

ஒரு முனை – அரசியல் பேச்சுக்கள். அதை முன்னெடுப்பதற்காக மொட்டுக் கட்சியின் பிதாமகர் பஸில் ராஜபக்ஷ சுமார் இரண்டரை மாத அஞ்ஞாத வாசத்தின் பின் நாடு திரும்பி விட்டார். பொதுத் தேர்தலை ஒட்டி, இனி அரசியல் விடயங்களை மொட்டுக் கட்சி சார்பில் அதிகம் நகர்த்தப்போகின்றவர் அவர்தான். அவரே நேரடியாக சு.க.வையும் அதன் தலைவர் மைத்திரிபாலவையும் தங்கள் வழிக்குக்கொண்டுவரும்வேலையைக் கையாள்வார். அதிகம் அரசியல் நிபந்தனைகளை விதிக் காமல், சத்தம் சந்தடியின்றி, பெரிய 'பந்தா' பண்ணாமல், மொட்டுச் சின்னத்தில், பொது ஜன பெரமுன பட்டியலில், சு.க. வினர் ஒழுங்காகக் களமிறங்குகின்றமையை உறுதிப்படுத் துகின்ற பணியை அரசியல் தளத்தல் பஸில் கையாள்வார்.

மறுமுனையில் மைத்திரிபால சிறிசேனவை சட்ட முறைமையில் கையாண்டு ஒழுங்கு முறைக்குக் கொண்டுவரும் தந்திரமும் கட்டவிழ்வதாகக் கூறப்படுகின்றது.

*"ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதலுக்கான பொறுப்பை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொலிஸ் மா அதிபர் ஆகியோர் மீது இலகுவாகச் சுமத்தி, அவர்களை விளக்க மறியலில் தள்ளிவிட்டு, ஜனாதிபதி மைத்திரிபால குலாகத் தப்பிவிட்டார். ஆனால், எவ்வாறு அந்த விடயங்களுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், பொலிஸ் மா அதிபரும் பொறுப்போ, அதே மாதிரி அப்போது பதவியில் இருந்த ஜனாதிபதியும் பொறுப்புத்தான். பதவியில் இருந்த சமயம் அவருக்கு இருந்த சட்ட விலக்களிப்பு அவரைக் காப்பாற்றியிருக்கலாம். ஆனால் பதவியை விட்டு விலகிய பின்னர் அது அவரைக் காப்பாற்றாது. அந்த விலக்களிப்பு நீக்கத்தை 19 ஆவது திருத்தம் மூலம் அவரே உறுதிப்படுத்தியுள்ளார். இப்போது இந்த ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு முன் வலுவான சாட்சியங்கள் வந்துள்ளன. தனியாகவும் விசாரணைகள் நடைபெறுகின்றன. புலனாய்வு அதிகாரிகளில் இருந்து அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வரை பலர் அளித்துள்ள சாட்சியங்கள் மைத்திரியையும் வலையில் மாட்டப் போதுமானவை. மைத்திரி எகிறினால் அவரை எங்கே முடக்கி, ஆளை எப்படி மடக்குவது என்பது ராஜபக்ஷக்களுக்குத் தெரியும். எல்லாம் 'வெல் – செட்'. இனிக் கட்டவிழ வேண்டியதுதான் மிச்சம்"* – என்று கொழும்பு சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒருவர் தகவல் வெளியிட்டார்.

ஒருபுறம் – அரசியல் ரீதியாகக் கையாள்கை. சரிவராவிட்டால் – மறுபுறம் சட்டரீதியாகவும் நெருக்குவாரம்.

இதுதான் மைத்திரிபால சிறிசேன எதிர்கொள்ளப் போகின்ற இரட்டை நெருக்கடிச் சிக்கல்.

இதில், பொதுத் தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கலுக்கு இடையில் பல கட்ட விடயங்கள் அரங்கேறும் என எதிர்பார்க்கலாம். அவற்றை எப்படி மைத்திரிபால சமாளிக்கப் போகின்றார்? அடங்குவாரா? எகிறுவாரா?

பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

– மின்னல்–

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சோதனைசாவடிகள் அமைக் கப்பட்டு பஸ்கள் சோதனை செய் யப்பட்டு வருகின்றன. இதனால், பொதுமக்கள் அசௌகரியங்க ளைச் சந்தித்து வருகின்றனர்.

பயணிகள் பஸ்களே முழு மையாக சோதனையிடப்படுவ துடன், கடந்த ஒரு வார கால மாக போர்க் காலத்துடன் ஒப்பி டும் வகையில் பஸ்களில் செல் லும் பயணிகள் முழுமையாக இறக்கிவிடப்பட்டு அவர்களது பயணப்பொதிகள் சோதனை யிடப்படுகின்றன. இதனால், பல் வேறு இடைஞ்சல்களுக்கு மத் தியில் பொதுமக்கள் தமது பய ணத்தைத் தொடர்ந்த வண்ணம் இருக்கின்றனர்.

வன்னிப்பகுதியில் மாங்குளத் தில் அமைக்கப்பட்டுள்ள சோத னைச் சாவடிக்கு அடுத்தபடியாக புதூர் சந்தியில் 15 கிலோமீற்றர் இடைவெளியில் மற்றொரு சோத னைச் சாவடியும் அமைக்கப் பட்டுள்ளது.

அதற்கு அடுத்ததாக 15 கிலோ மீற்றர் தூர இடைவெளியில் ஓமந் தையிலும் ஒரு சோதனைச் சாவடி அமைக்கப்பட்டு பொதுமக்கள் இறக்கிவிடப்பட்டு வரிசையில் நிறுத்திவைக்கப்பட்டு அவர்களது பைகள் சோதனை மேற்கொள் ளப் பட்ட பின்னர் ஏற்றப்படுகின்ற னர்.

இந்த நடவடிக்கையால் ஒரு சோதனைச் சாவடியில் 15 நிமிடத்தி ற்கும் அதிகமான தாமதம் ஏற்ப டுகின்றது. கடமையில் இருக் கும் இராணுவத்தினரின் எண் ணிக்கை குறைவாக இருக்கும் நிலையில் அதிகமான பஸ்கள் வருகை தரும்போது நீண்ட நேரம் எடுப்பதுடன் போக்குவரத்து நெரி சலும் ஏற்படுகின்றது.

இந்தச் சோதனைகளின் மூலம் சில பஸ்களில் இருந்து கஞ்சா மற்றும் போதைப்பொருள் கடத்தல் சம்பவங்கள் முறியடிக் கப்பட்டு வந்தாலும், பொதுமக்க ளைக் கடுமையாக அசௌக ரியப்படுத்துவதாகப் பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஐ)

## கோழிகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு இந்நிலைமை ஏற்பட்டது.

17,25 மற்றும் 27 வயதுடைய இளைஞர்களே இவ்வாறு உயி ரிழந்துள்ளனர். இது தொடர்பில் அவிசாவளை பொலிஸார் விசா ரணைகளை மேற்கொண்டு வரு கின்றனர். (ஐ)

## யாழ்.விமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பவித்ரா வன்னியராச்சி தெரி வித்துள்ளார்.

சுகாதார அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய அவர், அறிகுறிகளைக் காண்பிப்பது உட்பட சந்தேகத் திற்கிடமான அனைத்து நிகழ்வு களை யும் கண்டறிய விமான நிலையத்தில் வெப்ப ஸ்கானர் கள் பொருத்தப்பட்டுள்ளன எனக் கூறினார்.

நாட்டில் இதுவரை ஒருவர் மட் டுமே கொரோனா வைரஸ் தாக் கத்திற்கு உள்ளனர் என்று உறு திப்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு மேலும் 20 பேர் வைரஸ் பாதிப் பிற்குள்ளான சந்தேகத்தின் பேரில் அனுமதிக்கப்பட்டுள் ளனர் என்பதுடன் அவர்கள் தொடர்ந்தும் கண்காணிக்கப் பட்டு வருகின்றனர் என அமைச் சர் பவித்ரா வன்னியராச்சி தெரி வித்தார். (ஐ)

## யாழ்.பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

14 வெளிவாரி உறுப்பினர்களு டன் உள்வாரியாகப் பதவி வழி வரும் 13 உறுப்பினர்கள் அடங் கலாக 27 உறுப்பினர்களைக் கொண்ட புதிய பேரவையின் ஆட்சிக்காலம் தொடர்ந்து வரும் மூன்று ஆண்டுகளாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத் துக்கு வெளிவாரியாக 16 உறுப்பினர்கள் நியமிக்கப்பட வேண்டும். எனினும் இம்முறை 14 உறுப்பினர்கள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக வவு னியா வளாகம் வன்னி பல் கலைக்கழகம் என உருவாக்கப் படவுள்ள நிலையில் அந்த வளாகத்தின் மூன்று உள்வாரி உறுப்பினர்கள் நீங்கலாக உள் வாரி உறுப்பினர்கள் 13 பேர் என்ற அடிப்படையில் பேர வைக்கு வெளிவாரியாக 14 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பேரவைக்குத் தெரிவு செய் யப்பட்டுள்ள வெளிவாரி உறுப் பினர்களின் பெயர் விவரங்கள் வருமாறு :-

★பேராசிரியர் பொன். பால சுந்தரம்பிள்ளை

★பேராசிரியர் எஸ்.மோகன தாஸ்

★உதவிக்கல்விப்பணிப்பாளர் பஞ்சநாதன் சுதர்சன்

★கலாநிதி ஆறு. திருமுருகன்

★வெளிநாட்டுத்தூதரக மூன் றாம் நிலைச் செயலாளர் விதுர் சன் வின்சன்ற் ராஜாராம்

★சட்டத்தரணி ஆர்.ரி.விக்ன ராஜா (முன்னாள் மேல் நீதி மன்ற ஆணையாளர்)

★கலாநிதி சுரேன் ராகவன் (முன்னாள் வடக்கு மாகாண ஆளுநர்)

★நொத்தாரிசு மார்க்கண்டு திருவாதவூரன்

★பொறியியலாளர் விஸ் வலிங்கம் சுதாகர் (வீதி அபிவி ருத்தி அதிகார சபை)

★தனியார் விவசாய நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் குலேந்திரன் சிவராம்

★தில்லையம்பலவாணர் விமலன் (காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் வடக்கு மாகா ணப் பணிப்பாளர்)

★முன்னாள் மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு உறுப் பினர் பொன்னையா தியாகராசா

★கணக்காளர் வி.கனகசபாபதி

★ஊடகவியலாளர் கோணேஸ் வரன் ருசாங்கன். (ஐ)

## எமது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளுநர் அலுவலகத்துக்குக்கு முன்னால், நேற்று கவனயீர்ப் புப் போராட்டத்தை முன்னெடுத் தனர்.

இந்தச் சங்கத்தின் தலைவி ஆரதலைமையில், எம் பிள்ளை கள் எமக்கு வேண்டும் என்ற தொனிப்பொருளில், அமைதி யான முறையில் இந்தப் போராட் டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, காணாமல் ஆக் கப்பட்ட உறவுகளுக்கு நீதி வேண் டும், நாமும் இலங்கை மக்கள் தான், எமக்கும் சுதந்திரம் வேண் டும், எமக்கு சரியான நீதி வேண் டும், எமது பிள்ளைகளை விடு தலை செய் எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத் தனர்.

அதேவேளை, காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான நீதி வேண்டி சுழற்சி முறைமையில் முன்னெடுக்கப்பட்டு வரும் உணவு தவிர்ப்புப் போராட்டத் தின் ஓர் அங்கமாக 1,071 நாளாக நேற்றும் இந்தப் போராட்டம் முன் னெடுக்கப்பட்டது. (ஐ)

## இரு மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளவை வருமாறு:-

இலங்கை மின்சார சபைக்கு எரிபொருள் விநியோகத்துக் காக வழங்கப்பட்டிருந்த கடன் தொகை, வரையறைக்கு மேலதி கமாக அதிகரித்ததன் காரண மாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று கரவலப் பிட்டிய அனல் மின் நிலையத் திற்கு விநியோகிக்கப்படும் எரி பொருளை இடைநிறுத்துவதற் குத் தீர்மானித்தது.

இதற்கு அமைவாக கரவலப் பிட்டிய அனல் மின் நிலையத்தி ன் மின்சார உற்பத்தி தடைப்பட் டது. இதன் காரணமாக தினமும் 2 மணித்தியாலங்கள் மின் விநியோகத்தை இடைநிறுத்துவ தற்கு மின்சார சபை தீர்மானித் தது.

இருப்பினும் இது தொடர்பில் உடனடியாக தலையிட்ட போக்கு வரத்து முகாமைத்துவ மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர், அமைச் சரவையின் அங்கீகா ரத்துக்கு உட்பட்ட வகையில் மின் சார சபைக்கு எரிபொருள் விநி யோகத்தை தொடர்ச்சியாக முன்னெடுக்குமாறு இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் துக்கு ஆலோசனை வழங்கினார்.

இதற்கு அமைவாக மீண்டும் எரிபொருள் விநியோகிப்பதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தீர்மானித்தது. இதன் காரண மாக மின்சார சபையினால் திடீ ரென ஏற்பட்ட நிலைமையின் அடிப்படையில் நடைமுறைப்ப டுத்துவதற்குத் திட்டமிடப்பட்ட 2 மணித்தியால மின்வெட்டை அமுலாக்க மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் இடைநிறுத்தப்பட்டுள் ளது.

இதற்கு அமைவாக மீண்டும் தொடர்ச்சியாக மின்சாரத்தை பொதுமக்களுக்கு வழங்குவ தற்கு இலங்கை மின்சார சபை நடவடிக்கை மேற்கொண்டுள் ளது – என்றுள்ளது. (ஐ)

## உலகில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லியா மாவட்டத்தில் – ராகலை நகரில் அமைந்துள்ள ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி ஆலயத்தின் மஹா கும்பாபிசேகத்தை முன் னிட்டே 60 அடி உயரத்தில் இந் தத் திருவுருவச்சிலை நிர்மாணிக் கப்பட்டுள்ளது.

இதற்காக இந்தியாவின் மாமல்லபுரத்திலிருந்து அசோக் குமார் தலைமையிலான சிற் பாச்சாரிகள் வரவழைக்கப்பட்டி ருந்தனர்.

எட்டுசிற்பாச்சாரிகள் இணைந்து இரண்டு வருட காலப் பகுதிக் குள் சிலை அமைக்கும் திருப் பணியை நிறைவு செய்தனர்.

அத்துடன், மாமல்லபுரத்தி லிருந்து 35 அடி உயரமான வேலும் கொண்டவரப்பட்டது. தண்டாயுதபாணி என்பவரே வேலை வடிவமைத்துள்ளார்.

இலங்கையிலே முதலாவது உயரமான முருகப் பெருமானுக் கான திருவுருவச் சிலை இது வாகும்.

இந்தக் கோவிலில் சயன நிலையிலுள்ள விஷ்ணு சிலை யும் அமைக்கப்பட்டுள்ளது.

ராகலை ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தின் ஆலயத் தின் மஹாகும்பாபிசேகம் எதிர் வரும் 7 ஆம் திகதி காலை 9–30 மணிக்கு நடைபெறும் என அறி விக்கப்பட்டுள்ளது.

கொழும்பு–வத்தளை ஹேகித்த அருள்மிகு ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தில் அமைக் கப்பட்ட 32 அடி உயரமான முரு கன் சிலையே இதுவரை இலங் கையின் உயரமான முருகன் சிலையாகக் கருதப்படுகின்றது.

உலகிலேயே மிகவும் உயர மான முருகன் சிலை மலேசியா கோலாலம்பூரில் (140 அடி உய ரம்) அமைக்கப்பட்டுள்ளது.

அந்த முருகன் சிலையை மலேசியாவில் வடிவமைத்த தமி ழகத்தைச் சேர்ந்த திருவாரூர் தியாகராஜன் ஸ்தபதியாரின் குழுவினர், தமிழகத்தில் சேலம் மாவட்டம், வாழப்பாடி அருகி லுள்ள புத்திரகவுண்டன்பாளை யத்தில், அந்தச் சிலையை விட 6 அடி உயரமான முருகன் சிலையை (146 அடி) வடிவ மைத்து வருகின்றனர்.

அந்தப் பணிகள் இன்னும் நிறைவுபெறவில்லை. நிறைவு பெற்றதும் உலகில் முதலாவது முருகன் சிலை சேலத்தில் அமை யும். (ஐ)

## சுதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் மாணவர் ஒன்றி யம் வெளியிட்டுள்ள அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

ஈழத் தமிழர்கள் இலங்கை சுதந்திரமடைந்த நாள் தொடக் கம் இன்று வரை தொடர்ச்சியாகக் கட்டமைக்கப்பட்ட இன அழிப்புக் குட்படுத்தப்பட்டுக் கொண்டிருக் கின்ற நிலையில் எம் மக்களும் காலாதி காலமாக நீதி கேட்டுப் போராடிக் கொண்டிருக்கின்ற போதும் எமது மக்களின் போராட் டங்களை யாருமே கண்டு கொள் ளாத நிலையில் விரக்தியின் விளிம்பில் நின்று இலங்கையின் சுதந்திர தினத்தைக் கரிநாளாகப் பிரகடனப்படுத்தி நீதிக்காக எமது உறவுகள் போராடிக் கொண்டிருக் கின்றார்கள்.

இலங்கை ஐரோப்பியரின் காலனித்துவத்தில் இருந்து விடுபட்டு 72 ஆண்டுகள் நிறை வடைகின்றபோதும் ஈழத்தமிழர்க ளாகிய நாம் தொடர்ந்தும் கால னித் துவ ஆட்சி ஒன்றின் கீழே அடிமைகளாக வாழ்ந்து கொண் டிருக்கின்றோம். ஆண்ட பரம்ப ரையான நாம் அடங்கி ஒடுங்கிப் போய் இன்னொரு தேசத்தவரி னால் அடக்கியாளப்படுவதனை நாம் விரும்பவில்லை.

எமது மண்ணில் நாம் சுதந்தி ரமாக வாழ்வதற்கு எமது தாயக மண்ணிலிருந்து இராணுவம் வெளியேற்றப்படவேண்டும், மக் கள் தமது சொந்த நிலங்களில் குடியமர்த்தப்பட வேண்டும், இனப் பரம்பலை மாற்றியமைக்கும் வகையிலான திட்டமிட்ட குடியேற் றங்கள் நிறுத்தப்பட வேண்டும், வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் நிலை கண்டறியப் படவேண்டும், நீண்ட காலமாகச் சிறையில் வாடும் அரசியல் கைதி கள் விடுதலை செய்யப்பட வேண் டும், தமிழர் தாயகத்தில் இடம் பெறும் நில ஆக்கிரமிப்புக்கள் நிறுத்தப்படவேண்டும் – ஆகிய அடிப்படையான அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வுக்கான சர்வதேச அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும்.

உலக ஒழுங்கில் சிறுபான்மை இனங்களைப் பெரும்பான்மை அரசுகளிடம் இருந்து காப்பாற்ற பல சட்டங்கள் காலத்துக்குக் காலம் இயற்றப்பட்டு வந்துள் ளன. அதன் ஆரம்பமாக 1949 ஆம் ஆண்டு ஜெனீவா தீர்மா னம் 49 கொண்டு வரப்பட்டிருந் தது. அதன் தொடர்ச்சியாகப் பல் கன் குடியரசுகளை முன் நிறுத்தி 1992ஆம் ஆண்டு ஐ.நாவின் பாதுகாப்புச் சபையில் 780 ஆவது தீர்மானம் கொண்டுவரப்பட்டி ருந்தது. இந்த தீர்மானத்தின்படி இனச் சுதந்திரமானது இனப் படுகொலையின் வரைமுறைக ளுக்குள் கொண்டுவரப்பட்டி ருந்தது.

அந்த வகையில் மேற்குறிப் பிட்ட தமிழ் மக்களுக்கு எதிரான அடக்குமுறைகள் என்பவை இனப் படுகொலையாகவே அமைந்து காணப்படுகின்றன. இத்த கைய இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையின் உச்சமே முள்ளி வாய்க்கால் இனப் படுகொலையாகும்.

சர்வதேசம் தமிழ் மக்களின் போராட்டத்தின் நியாயத் தன்மை யைப் புரிந்து கொள்ளவேண்டும். இலங்கை அரசு தமிழ் மக்களின் அடிப்படையான அரசியல் பிரச் சினைகளைத் தீர்ப்பதில் கரி சனை கொள்ளவில்லை. இத்த கைய ஒரு சூழ்நிலையில் சர்வ தேசப் பொறிமுறை ஒன்றினூ டாக இலங்கை விவகாரம் கையா ளப்பட வேண்டும்.

இத்தகைய சூழ்நிலையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை மீட்பதற்காக கொளுத் தும் வெயிலிலும் கொட்டும் மழை யிலிலும் எமது உறவுகள் கண்ணீ ரோடு வீதிகளில் இறங்கிப் போரா டிக் கொண்டிருக்கும்போது, உண் மையான அறத்துடன் தமிழ் இனத்தின் மீது பற்றுக் கொண்ட எவரும் இலங்கையின் சுதந்திர தின நிகழ்வுகளில் பங்கேற்க மாட்டார்கள்.

அதேவேளை இலங்கையின் சுதந்திர நாளை கரிநாளாக அறிவித்து அன்றைய நாளில் வடக்கில் கிளிநொச்சி மாவட்டத் தில் கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாகவும் கிழக்கில் மட்டக்க ளப்பு மாவட்டத்திலும் வடக்கு – கிழக்கு வலிந்து காணாமல் ஆக் கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தின் ஒருங்கிணைப்பில் பெரும் ஆர்ப்பாட்டம் ஒழுங்க மைக்கப்பட்டுள்ளது.

இதற்கு முழுமையான ஆத ரவினை வழங்குவதோடு போராட்டத் தில் கலந்து கொண்டு வலுச்சேர்க் குமாறு தமிழ் உறவுகள் அனை வரிடமும் அன்புரிமையுடன் கேட் டு நிற்கின்றோம்.

இலங்கையில் ஆட்சிப் பீடம் ஏறும் எந்தவொரு அரசியல் தலைமையும் ஒற்றையாட்சிக் கட்டமைப்பிலும் சிங்கள பௌத்த திற்கான முன்னுரிமை என்பவற் றில் இருந்து விலகி ஒரு போதும் புதிய அரசியல் அமைப்பு ஒன்றி னைத் தாமாக விரும்பி உரு வாக்க மாட்டார்கள் என்பது வர லாறு எமக்குக் கற்றுத்தந்துள் ளது.

ஆகவே தொடர்ந்தும் நாம் ஏமாறத் தயாரில்லை என்பதை கூறிக் கொள்வதோடு எமது மக் களின் ஜனநாயக முறையிலான போராட்டங்களில் எமது மாணவர் ஒன்றியம் தொடர்ந்தும் பயணிக் கும் – என்றுள்ளது. (ஐ–07)

## உயர்நீதிமன்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்நீதிமன்ற நீதியரசராக நேற் றுப் பதவியேற்றார்.

அத்துடன், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதியரசர் எச்.எம். டி.நவாஸ், மேன்முறையீட்டு நீதி மன்றத்தின் தலைவராக பதவி யேற்றார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று மாலை ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷவின் முன்னி லையில் நீதியரசர்கள் இருவரும் உறுதியுரை எடுத்தனர்.

இந்த இருவரது நியமனத் துக்கும் ஜனாதிபதி கோட்டாபய முன்வைத்த பரிந்துரைக்கு அர சமைப்புச் சபை கடந்த மாத இறுதி யில் ஒப்புதல் வழங்கியமை குறிப் பிடத்தக்கது. (ஐ)

## நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## தமிழருக்கு இது சுதந்திர தினமா?

**இன்று இலங்கைத் தீவின் சுதந்திர தினம்.**

**பிரிட்டிஷ் கொலனித்துவ ஆட்சியாளர்களிடமிருந்து இலங்கைத் தீவு விடுவிக்கபட்டதன் பின்னரான 72 ஆவது சுதந்திர தினத்தை இலங்கை இன்று கொண்டாடுகின்றது.**

**ஆனாலும், இந்த இலங்கைத் தீவின் தேசிய இனங்களில் ஒன்றான இலங்கைத் தமிழினம் இதனை ஒரு சுதந்திர தினமாகக்கொண்டாடும் மனநிலையில் இல்லை என்பதுதான் யதார்த்த நிலைமை.**

**தனியான தேசிய இனமான தமிழினத்தை – தனியான தேசமான தமிழர் தேசத்தை – பொறுத்தவரை அவர்கள் மீதான ஆட்சிப் பிடி ஓர் அந்நியரான ஆங்கிலேயரிடமிருந்து இந்தத் தீவின் மற்றொரு சுதேசிய இனமான சிங்களவர்களிடம் கை மாறிய ஒரு விடயமாகவே இத் தினத்தைப் பார்க்கின்றனர்.**

**தமிழர் தேசத்தை – அவர்தம் இறைமையை – அடிமைப் படுத்தியிருக்கும் ஆட்சியாளர்களின் தரப்புகள் மாறியமை பற்றிய தினமாகவே இதனைத் தமிழர்கள் நோக்குகின்றனர்.**

**ஆகவே அவர்களைப் பொறுறுத்தவரை இது சுதந்திர தினமாக நோக்கற்படக் கூடியதன்று. மாறாக அடிமைகள் தினமாகப் பார்க்கப்பட வேண்டிய ஒன்றே.**

**தமிழர்களையும் சேர்த்து அடிமைப்படுத்திய தரப்புகள் தங்களின் ஆட்சி அதிகாரங்களைத் தங்களுக்குள் மாற்றிக் கொள்கின்றமையைத் தனது சுதந்திர தினமாகத் தமிழர் தரப்பு கருதுவதற்கு எந்த முகாத்திரமும் இல்லை; எந்தக் காரணமும் இல்லை.**

**தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட சிங்களத்தின் தேசிய கீதத்தைத் தமிழில் பாடுவதற்குக் கூட உரிமை இல்லாத நிலைமையில்தான் தமிழரின் சுதந்திரம் இந்தத் தீவில் உள்ளது.**

**இந்தப் பத்தியில் நேற்று நாம் சுட்டிக்காட்டியபடி, இலங்கைத் தீவில் தமிழர்களின் வரலாற்று வேரோடல்கள் மிக ஆழமானவை; பல்லாயிரம் ஆண்டுகள் தொன்மையானவை. கிறிஸ்துவுக்கு முந்திய சரித்திரத்தைக் கொண்டவை.**

**இந்த இலங்கைத் தீவை சுமார் ஐநூறு ஆண்டுகளுக்கு முன்னர் மேற்குல அந்நிய கொலனித்துவ ஆட்சியாளர்கள் படையெடுத்து, ஆக்கிரமித்துக் கைப்பற்றுவதற்கு முன்னர், தீவின் வடக்கிலும் கிழக்கிலும் தமிழர் தேசம், தனித்துவமான மொழி, வாழ்க்கை முறை, பண்பாடுகள், வாழ்வியல் கோலங்கள், தனி இராச்சியம் ஆகியவற்றுடன் தனக்கேயுரிய தனித்துவத்துடனும் இறைமையுடனும் விளங்கியது.**

**தமிழர் தேசத்தை போர்த்துக்கீசர் கைப்பற்றிய போது, அதன் இறைமையைச் சேர்ந்து வன்கவர்ந்து கொண்டனர்.**

**அதன் பின்னர் தமிழர் தேசம் உட்பட்ட இலங்கைத் தீவின் மீதான ஆளுகை போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், அதனைத் தொடர்ந்து வந்த ஆங்கிலேயர் எனப் பலரின் கைகளுக்கும் மாறியது. அதன் போது தமிழர்களிடமிருந்து வன்கவரப்பட்ட தமிழர் தேசத்தின் இறைமையும் கைமாறியது.**

**1948 இல் பிரிட்டிஷ் வெள்ளைக்காரக் கொலனித்துவ ஆட்சியாளர்கள் இலங்கைத் தீவுக்கு சுதந்திரமளித்து விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் வந்தபோது, இந்தத் தீவில் தமிழர்களிடமிருந்து வன்கவரப்பட்டு, ஆக்கிரமிப்பாளர்களிடையே தொடர்ந்து கைமாறி வந்த தமிழர் தேசத்தின் இறைமையையும் சேர்த்து எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான சிங்களவர்களிடம் கையளித்து விட்டு வெளியேறினார்.**

**இவ்வாறு தமிழர் தேசத்தின் தனித்துவ இறைமை அந்நியரால் வன்கவரப்பட்டு பின்னர் அந்நியர் ஆட்சிகளிடையே கைமாறப்பட்ட நிலையில் இறுதியாக இந்தத் தீவின் மற்றொரு சுதேசிய இனமான சிங்களப் பெரும்பான்மை இனத்தவரிடம் ஒப்படைக்கப்பட்டது.**

**பெரும்பான்மையினரின் முடிவே ஜனநாயகத் தீர்ப்பு – தீர்வு – என்ற அடிப்படையில் இந்தத் தீவில் எண்ணிக்கையில் பெரும்பான்மையினரான சிங்களவர்கள், தமிழர் தேசத்தின் அந்த இறைமையைத் தொடர்ந்து தமது பெரும்பான்மை என்ற அட்சர கணித எண்ணிக்கையைச் சாதகமாகப் பயன்படுத்தித் தமது கட்டுப்பாட்டில் வைத்து, தமிழர்களையும் அவர் தம் தேசத்தையும் தொடர்ந்து அடிமைப் படுத்தி வருகின்றனர்.**

**தமிழர் ஒரு தேசம் – தேசியம் – என்ற உண்மையை, வரலாற்று நிதரிசனத்தை, ஒப்புக் கொள்ள மறுக்கும் சிங்களம், அந்தத் தேசத்தைத் தனது நாட்டின் ஒரு பகுதியாகக் கருதி அதனை அடிமைப்படுத்த எத்தனிக்கின்றது.**

**இந்த அடிமை வாழ்விற்கு இடையே இந்தத் தினத்தை சுதந்திர தினமாக மனங்கொள்வதற்கு தமிழருக்கு எந்த முகாந்திரமும், அடிப்படையும் இல்லை என்பதை தென்னிலங்கைத் தலைவர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.**

**தமிழர் தமது இனப் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டி நடத்திய அஹிம்சைப் போராட்டங்களும், ஆயுத வழியிலான ஈகைப் போராட்டங்களும் தென்னிலங்கைச் சிங்களத்தின் கொடூரமான, படுபயங்கரமான, அடக்கு முறை நடவடிக்கைகள் மூலம் ஆயுத முனையில் ஒடுக்கப்பட்டிருக்கும் சூழலில், இந்தத் தினத்தை சுதந்திர தினமாக அனுஷ்டிக்கும் மனநிலையில் தமிழர் தேசம் இல்லை என்பதுதான் இன்றைய நிஜத்தின் பதிவாகும்.**

# தமிழரின் விடிவுக்காக உளத்தூய்மையுடன் செயற்படும் கட்சிகள் இணையவேண்டும்!

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. தெரிவிப்பு



மட்டக்களப்பு, பெப். 04

தமிழ் மக்களின் விடிவுக்காக உள்ளத் தூய்மையுடன் செயற்படும் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும் என தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வெறுமனே ஆசனத்துக்காக மட்டும் செயற்பட முடியாதெனத் தெரிவித்துள்ள அவர், தாங்கள் விட்டுக்கொடுப்புக்குத் தயாராக இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறுகையில் –

எமது கட்சியின் மட்டக்களப்பு நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்பாளர்களாக முன்னாள் மாகாணசபை உறுப்பினர் கோவிந்தம் கருணாகரம் மற்றும் எமது கட்சியின் மட்டக்களப்பு இளைஞர் குழுவின் தலைவர் சட்டத்தரணி நவரெட்ணராஜா கமலதாஸ் ஆகியோரை நியமிப்பதென மாவட்டப் பொதுச்சபை கூடி ஏகமனதாக தீர்மானித்துள்ளோம்.

தமிழீழ விடுதலை இயக்கம் என்பது இன்றைக்கும் அரசியற் களத்தில் இருந்து கொண்டிருக்கின்றது. போராட்டக் காலத்தில் சகோதரப் படுகொலைகள் மூலம் தமிழீழ விடுதலை இயக்கம் முற்றாக அழிந்துவிட்டது எனப் பலரும் நினைத்த காலகட்டமும் இருந்தது.

ஆனால் அதன் பின்பும் நாங்கள் விடுதலைப் புலிகளுடன் இணைந்து அரசியல் ரீதியில் எமது கடமைகளை மேற்கொண்டோம். ஒற்றுமையின் நிமித்தமும், ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் எந்தவொரு அமைப்பாக இருந்தாலும் அதனைப் பலவீனப்படுத்தக்கூடாது என்ற இரு காரணங்களுக்காகவுமே எமது செயற்பாடு அவ்வாறு இருந்தது.

எனவே ஒற்றுமை தொடர்பாக தமிழீழ விடுதலை இயக்கம் பெரும் வரலாற்றைக் கொண்டது. இதில் யார் இருக்கின்றார்களோ இல்லையோ தமிழீழ விடுதலை இயக்கம் அதன் பயணத்தைத் தொடரும். எம்மில் இருந்து விலகிச் சென்றவர்களால் நாம் பலவீனமாகிவிட்டோம் என்ற எண்ணம் எங்களைப் பொறுத்தமட்டில் இல்லை.

தமிழ்த் தேசியக் கூட்மைப்பின் தலைமை பற்றி அண்மையில் பலரும் பலவாறு சொல்லிக் கொண்டு வருகின்றார்கள். அது அவரவர்களின் தனிப்பட்ட கருத்துக்களேயன்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கருத்துக்கள் அல்ல.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் மூன்று கட்சிகள் இருக்கின்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையைத் தெரிவு செய்வதில் மூன்று கட்சிகளுக்கும் பங்கு இருக்கின்றது. எனவே எமது மூன்று கட்சிகளும் இணைந்தே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரைத் தெரிவு செய்கின்ற பொறுப்புடன் இருக்கின்றோம்.

முன்னாள் முதல்வர் விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைவதென்பது வரவேற்கக்கூடிய விடயம். அவ்வாறு இணையும் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பினால் 22 ஆசனங்களை சுலபமாகப் பெறமுடியும்.

ஏனெனில் மக்கள் ஒற்றுமையை மிகவும் விரும்புகின்றார்கள். உள்ளே வந்து நாட்டாமைத்தனம் அல்லது மற்றவர்களை அனுசரிக்காத தன்மையை உண்டுபண்ணிவிடக் கூடாது. அந்த வகையிலே எல்லோரையும் அனுசரித்துச் செல்லக் கூடிய ஒரு நிலையை மக்களின் விடிவு என்ற ஒன்றை எண்ணி இருப்பவர்கள் மனதில் ஏற்படுத்த வேண்டும். வெறுமனே ஆசனத்திற்காக நாங்கள் செயற்பட முடியாது – என்றார்.

# ஆலோசகர் பதவியிலிருந்து கப்ராலை நீக்கவேண்டும்

## முஜிபுர் பிரதமரிடம் கோரிக்கை



கொழும்பு, பெப். 04

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது ஆலோசகர் பதவியிலிருந்து முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலை நீக்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கோரிக்கை விடுத்துள்ளார்.

மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பாக வெளிவந்துள்ள தடயவியல் அறிக்கையின் பிரகாரம் அஜித் நிவாட் கப்ரால் பதவிக் காலத்திலும் பிணைமுறி மோசடி இடம்பெற்றுள்ளதாக உறுதியாகியுள்ளது எனச் சுட்டிக்காட்டியுள்ள அவர் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

2015ஆம் ஆண்டு இடம்பெற்றதாகக் கூறப்படும் மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பாக பரிசீலனைகளை மேற்கொண்டிருந்த கோப் குழு மற்றும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கைகள் தற்போது வெளியிடப்பட்டுள்ளன.

இதன் பிரதிகள் சட்டமா திணைக்களத்துக்கும் அனுப்பப்பட்டுள்ளன. இந்த விடயம் தொடர்பாக சட்டமா திணைக்களம் அவதானம் செலுத்தி குற்றவாளிகளுக்கு எதிராக நடவடிக்கைக எடுக்க வேண்டும்.

பிணைமுறி மோசடி குறித்து வெளிவந்துள்ள தகவல்களை ஆளும் தரப்பினர் திரிவுப்படுத்த முயற்சிக்கின்றனர்.

நல்லாட்சியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் மோசடியை கொள்ளை என்றும் , 2015 ஆம் ஆண்டுக்கு முன்னர் செயற்பட்டு வந்த அரசின் போது இடம்பெற்றதாக கூறப்படும் மோசடிகளை நட்டம் என்றும் அவர்கள் தெரிவித்து வருகின்றனர்.

ஊழியர் சேமலாப நிதியே இவ்வாறு மோசடி செய்யப்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்கு நியாயத்தை பெற்றுக் கொடுக்க வேண்டும் – என்றார். (ஐ)

**நாளை** **05.02.2020 - புதன்கிழமை**

நட்சத்திரம்: மிருகசீரிடம் மு.இ. 11.29 வரை
திதி : ஏனாதசி மு.இ. 06.40 வரை
இராகுகாலம் : 12.35 – 02.05
சுப நேரம் : 05.05 – 06.35

# அரசின் அடிமைகளாகத் தமிழரை மாற்றியமைத்தவர் சுமந்திரனே!

## விக்னேஸ்வரன் காட்டமான கருத்து



கொழும்பு, பெப். 04

கடந்த அரசின் கைக்கூலிகளாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் செயற்பட்டனர். அதற்கு முக்கியமானவர் சுமந்திரனே. அரசின் அடிமைத்தனத்துக்குள் எமது மக்களை கொண்டு சென்றவர் அவர்தான் என வெளிப்படையாக குற்றம் சாட்டினார் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்

தனியார் தொலைகாட்சி நிகழ்ச்சி ஒன்றில் அவர் நேற்று இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எனது மாணவனாகிய சுமந்திரனை நான் தனிப்பட்ட ரீதியில் அதிகம் விமர்சிக்க விரும்பவில்லை. அந்தத் தேவையும் எனக்கில்லை. எனினும் கொள்கையின் பொருட்டே நான் அவருடன் முரண்படுகிறேன்.

பொதுக் கொள்கையின் அடிப்படையில் நாம் யாருடனும் கூட்டுச் சேர்வதற்குத் தயாராக உள்ளோம். எனினும், சுயலாப அரசியலுக்காகத் தேர்தல் கூட்டு வைப்பதற்கு நாம் ஒருபோதும் தயாரில்லை. அரசுடன் இணைந்து செல்வதன் மூலம் எமது மக்களுக்குச் செய்யாது விடும் விடயங்களை தட்டிக் கேட்கத் திராணி இல்லாமல் போகும்.

பூகோள அரசியல் நிலைமையைப் புரிந்து கொண்டு செயல்படவேண்டும். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவாக வாக்களித்தமைக்கு, ஜனாதிபதி கோட்டாபய மீதான வெறுப்பேயன்றி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கூறியதால் அல்ல. கூட்டமைப்பினர் வெளிப்படையாகப் பரப்புரை செய்தமையும் தோல்விக்கு ஒரு காரணமாக அமைந்தது. அதேநேரம் தேர்தலைப் பகிஷ்கரிக்கக் கூறிய கஜேந்திரகுமாரின் முடிவும் முட்டாள்தனமானது.

நான் முதலமைச்சராக இருந்த காலத்தில் எதுவும் செய்யவில்லை எனக் குற்றம் சாட்டுபவர்கள், நாம் செய்த விடயங்களைக் கூறாது விடுவது வேடிக்கையானது. நாம் அந்த நேரத்தில் எதிர்கொண்ட சவால்களைப் பற்றியோ தடைகளை பற்றியோ அவர்கள் கூறுவதில்லை. அந்தத் தடைகளைத் தாண்டி அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நாம் செயற்பட்டமை பலருக்குத் தெரியாது. அரசிடம் இருந்து வந்த தடைகளை விட தமிழ்த் தலைவர்கள் சிலரிடம் இருந்து வந்த தடைகள் அதிகமானவை.

சமூகப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கு எமது காலத்தில் முற்பட்ட போதும் எமக்கு அதிகாரம் கிடைக்கவில்லை. தேவைகளை முன்னிறுத்தி நல்லாட்சி அரசிடம் 12000 மில்லியன் கேட்டபோது நமக்கு கிடைத்தது வெறும் 1,260 மில்லியன் மாத்திரமே – என்றார். (ஐ)

# சீனர்களுக்கு சேவை வழங்க சிலர் மறுத்து வருகின்றனர்

## கொழும்பில் உள்ள தூதர் கவலை



கொழும்பு, பெப். 04

இலங்கையின் சில வாடகை வாகன ஓட்டுநர்கள், ஹோட்டல்கள் மற்றும் உணவகங்கள் சீன நாட்டினருக்குச் சேவை செய்ய மறுக்கின்றனர் என்று இலங்கையில் உள்ள சீன தூதர் செங் சியாங் வருத்தம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

இலங்கை பொதுமக்களின் அவலநிலையை அவரும் தனது அலுவலகமும் புரிந்து கொண்டதாகவும், சீனாவின் நிலைமையையும் இலங்கையர்கள் புரிந்துகொள்வார்கள் என்றும் நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் –

நாங்கள் எப்படியாவது இந்த வேதனையான கால கட்டத்தை வெல்வோம். நாம் திரும்பிப் பார்க்கும் போது, எங்களுக்கு உதவியவர்களின் முகங்களை நினைவில் கொள்கிறோம்.

கடந்த சில நாட்களாகச் சீனத் தூதரகத்தின் ஊழியர்களுக்கு இலங்கை நண்பர்கள் மிகவும் உதவியாக இருந்தனர். எங்கள் இலங்கை நண்பர்கள் எங்களை ஊக்குவித்தனர். இந்த கட்டத்தில் இது எங்களுக்கு மிகப் பெரிய விடயம். இது மிகவும் ஊக்கமாகவும் எங்களுக்கு ஒரு பெரிய ஆசீர்வாதமாகவும் இருந்தது. இது நம் இதயங்களில் அன்பையும் இரக்கத்தையும் தூண்டுகிறது.

பொறுப்பான மற்றும் முன்னணி நாடாக, கொரோனா வைரஸ் பரவாமல் தடுக்க சீனா பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

அவர்களில் பலர் இலங்கைக்கு உதவுவார்கள் என்று நம்புகிறோம். ஹூபே மாகாணத்தில் வசிப்பவர்கள் இலங்கைக்குச் செல்ல வேண்டாம் என்று கூறப்பட்டுள்ளது. சந்தேகத்திற்கிடமான சம்பவங்கள், அறிகுறிகள் அல்லது குழுக்களில் இலங்கைக்குச் செல்ல வேண்டாம் என்றும் எங்கள் நாட்டினரை எச்சரித்துள்ளோம்.

இதேபோல், நாட்டின் பிற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் இலங்கைக்கு வருகை தந்தால், அவர்கள் இலங்கைக்கு வந்தவுடன் 14 நாள் தனிமைப்படுத்தப்பட்ட செயல்முறைக்கு இணங்க வேண்டும். இலங்கையில் உள்ள சீனர்களுக்கு நாங்கள் ஏற்கனவே அறிவுறுத்தியுள்ளோம்.

வுஹானில் உள்ள இலங்கை மாணவர்களை மீட்பதற்கு எங்களது முழு ஆதரவையும் வழங்கியுள்ளோம். தகுந்த நடவடிக்கைகள் மற்றும் பாதுகாப்புகளைப் பின்பற்றுமாறு இலங்கை அதிகாரிகளையும் நினைவுபடுத்துகிறோம்.

இலங்கை மக்கள் அரசின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி சமூக நெறியை நிலைநிறுத்துவார்கள் என்றும் நாங்கள் நம்புகிறோம் – என்றார். (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், பெப்.04

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை **காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை-**

**யாழ் பிரதேசத்தில் -**

வராத்துப்பளை, புனிதநகர், கற்கோவளம், தும்பளை, வெளிச்சவீடு, 1 ஆம் குறுக்குத்தெரு, 2 ஆம் குறுக்குத்தெரு, 3 ஆம் குறுக்குத்தெரு, ஜெயந்தா கைத்தொழிற்சாலை பிறைவேற் லிமிற்றெட் கற்கோவளம் ஆகிய இடங்களிலும் –

**வவுனியாப்பிரதேசத்தில் -**

புதுக்குளம் கோவில்குளம் கிராமம், பகல அளுத்வத்த கிராமம், நாகரிலுப்பைக்குளம், பொன்ன வரசங்குளம், அறுகம்புல்வெளிய, அவுசதப்பிட்டிய, பம்பைமடுவிலிருந்து குருக்கள்புதுக்குளம் வரை, பம்பைமடு பல்கலைக்கழகம், வவுனியா பல்கலைக் கழகம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# உணவுப் பொருள்கள் ஊடாக கொரோனா வைரஸ் பரவாது

கொழும்பு, பெப். 04

கொரோனா வைரஸ் எந்தவொரு உணவுப் பொருட்கள் ஊடாகவும் பரவாது எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எனவே இந்த விடயம் குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை என்றும் அந்த அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான நோயாளியின் சளி உடலுக்குள் சென்று, தும்மல் அல்லது வேறு வழிகளில் நோயாளியின் தொற்று, வேறு ஒருவரின் உடலுக்குள் செல்வதன் காரணமாகவே கொரோனா வைரஸ் தொற்று பரவுவதாக சுகாதார அமைச்சு மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, தற்போது தியத்தலாவை இராணுவ முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள சீனாவின் வுஹான் நகரில் இருந்து அழைத்து வரப்பட்டுள்ள மாணவர்களில் எவருக்கும் நோய் தொற்று ஏற்படவில்லை என மேலதிக பதில் சுகாதார சேவை பணிப்பாளர் நாயகம் லக்ஸ்மன் கம்லத் தெரிவித்துள்ளார்.

எனினும் 33 மாணவர்களும் நாளாந்தம் ஒரு மணித்தியாலத்திற்கு ஒருமுறை மருத்துவ பரிசோதனைகளுக்கு உட்படுத்தி அவர்களின் உடல் வெப்பநிலை குறித்து அவதானம் செலுத்தப்படுகிறது.

பரிசோதனை தரவுகள், வைபர் மற்றும் வட்சப் ஊடாக மருத்துவர்களின் கண்காணிப்பிற்காக அனுப்பப்படுவதாக இராணுவத் தலைமையம் அறிக்கையொன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது.

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# நால்வரைத் தூக்கிலிடும் சர்ச்சை; தீர்ப்பை ஒத்திவைத்தது நீதிமன்று



நிர்பயா வழக்குக் குற்றவாளிகள் நால்வருக்கும் விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை இடைநிறுத்தி நீதிமன்றம் வழங்கிய தடைக்கு எதிராக இந்திய மத்திய அரசும், திகார் சிறை நிர்வாகமும் தாக்கல் செய்த மேல்முறையீட்டு மனுக்கள் மீதான தீர்ப்பை, டெல்லி உயர்நீதிமன்றம் ஒத்திவைத்திருக்கிறது.

ஓடும் பஸ்ஸில் யுவதியை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தி படுகொலை செய்த வழக்கில் 4 குற்றவாளிகளுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருப்பது தெரிந்ததே.

இந்த நால்வர் சார்பிலும் மாறி,மாறி மேன்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்படுகின்றமையால. தூக்கு நிறைவேற்றப்படும் தினம் அடிக்கடி தள்ளிப் போகின்றது.

இதனால், நிர்பயா குற்றவாளிகளுக்கான தூக்குத் தண்டனையை தனித்தனி நாள்களில் நிறைவேற்றக் கோரி திகார் சிறைத்துறை நிர்வாகம் சார்பிலும் –

மாறி,மாறி மனுக்களை தாக்கல் செய்து, குற்றவாளிகள் நேரத்தை வீணடிப்பதாக கூறி மத்திய அரசின் சார்பிலும்– டெல்லி உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மேல்முறையீட்டை அவசர வழக்காக கருதி விசாரித்த டெல்லி உயர் நீதிமன்ற சிறப்பு அமர்வு, தீர்ப்பை திகதி குறிப்பிடாமல் ஒத்திவைத்து உத்தரவிட்டுள்ளது.

# சீனாவில் இருந்து வந்த 799 பேர் தொடர்ந்தும் கண்காணிப்பில்!

## தமிழகச் சுகாதாரத்துறை அமைச்சர் தகவல்



சென்னை,பெப்.04

சீனா உள்ளிட்ட நாடுகளில் இருந்து வந்த 799 பேர் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றனர் என சுகாதாரத் துறை அமைச்சர் விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார்.

சென்னை கிண்டியில் உள்ள கிங் இன்ஸ்டிட்யூட் வளாகத்தில், கொரோனா வைரஸ் பாதிப்புகளை கண்டறிவதற்காக அமைக்கப்பட்டுள்ள ஆய்வுக்கூடத்தில் சுகாதாரத்துறை அமைச்சர் விஜயபாஸ்கர் ஆய்வு செய்து, அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்த அமைச்சர் விஜயபாஸ்கர், சென்னை திருச்சி மதுரை கோவை என 4 விமான நிலையங்களில் இதுவரை 5,543 பயணிகல் சோதனை செய்யப்பட்டுள்ளனர் எனக் கூறினார். சீனாவில் இருந்து வந்த 646 பேர் உள்பட 799 பேர் தீவிரமாக கண்காணிக்கப்படுகின்றனர் எனத் தெரிவித்தார்.

சென்னை ராஜிவ் காந்தி அரசு மருத்துவமனையில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுளள 10 பேருக்கு கொரோனா வைரஸ் அறிகுறி இல்லை என்று அவர் கூறினார்.

இதுவரை தமிழகத்தில் யாருக்கும் பாதிப்பு இல்லை என்று கூறிய அமைச்சர், 1,642 பாதுகாப்பு உடைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். கிங்ஸ் இன்ஸ்டியூட் ஆய்வுக் கூடத்தில், மாதிரிகள் சோதனை செய்யப்பட்டு 48 மணி நேரத்தில் அதன் முடிவுகள் தெரிய வரும் என்றும் அமைச்சர் விஜயபாஸ்கர் கூறினார்.

# காங்கிரஸ் கூட்டத்தில் மோதல்



கன்னியாகுமரி காங்கிரஸ் நிர்வாகிகள் கூட்டத்தில் நடந்த மோதலில் மீனவர் அணி மாநிலத் தலைவர் மண்டை உடைந்தது.


நாகர்கோவிலில் உள்ளாட்சித் தேர்தல் குறித்து அகில இந்திய காங்கிரஸ் செயலாளர் சஞ்சய் தத் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் எம்.பி. வசந்தகுமார், காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள், நிர்வாகிகள் பலரும் பங்கேற்றிருந்தனர்.

இந்த நிலையில் கூட்டத்தில் எம்.பி.வசந்தகுமாருக்கு எதிராக காங்கிரஸ் மீனவர் அணி மாநிலத் தலைவர் சபின் பேசினார் எனக் கூறப்படுகிறது. இதனால் இரு பிரிவினர் இடையே மோதல் மூண்டதில் ஒருவர் மீது ஒருவர் நாற்காலிகளைத் தூக்கி வீசித் தாக்கிக்கொண்டனர்.

தகவலறிந்து வந்த பொலிஸார், இருபிரிவினரையும் விலக்கி அப்புறப்படுத்தினர். தாக்குதலில் சபின் உள்பட பலரும் காயமடைந்தனர்.

# தமிழகத்தில் கொரோனா அறிகுறி!



சென்னை,பெப்.04

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அரசு மருத்துவமனைகளில் 6 பேர் கொரோனா அறிகுறியுடன் தனி வார்ட்டில் வைத்துக் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

கொரோனா வைரஸ் பரவி வருவதை கருத்தில் கொண்டு, சீனாவில் இருந்தும், பிற நாடுகளில் இருந்தும் திரும்பி வருவோர் தமிழகத்தின் பல்வேறு இடங்களிலுள்ள விமான நிலையங்களிலும் மருத்துவ குழுக்களால் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இந்தப் பரிசோதனையின் அடிப்படையில், சீனாவிலிருந்து வந்த பெண் மருத்துவர் உள்ளிட்ட 2 பெண்களும், 47 வயதான சீன நாட்டவர் ஒருவரும் சென்னை ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் தனிவார்ட்டில் வைத்துக் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

இதேபோல், சிங்கப்பூரிலிருந்து திருச்சி திரும்பிய 27 வயது இளைஞர் ஒருவரும், கொரானா வைரஸ் அறிகுறியுடன் அங்குள்ள மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் தனிவார்டில் கண்காணிக்கப்பட்டு வருகிறார். இதுகுறித்து பேசிய திருச்சி அரசு மருத்துவமனை டீன் வனிதா, இளைஞருக்கு மூச்சுத் திணறல் போன்ற அறிகுறி எதுவும் இல்லையென்ற போதிலும், தொடர்ந்து கண்காணிப்பில் வைக்கப்பட்டிருக்கிறார் எனத் தெரிவித்தார்.

இதனிடையே, சீனாவில் இருந்து தமிழகம் திரும்பிய 799 பேருக்கு இதுவரை 4 விமான நிலையங்களில் வெப்ப பரிசோதனை செய்யப்பட்டு, அவர்களுடைய வீட்டிலேயே மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டிருக்கின்றனர் எனத் தமிழகப் பொது சுகாதாரத்துறை இயக்குனரகம் தெரிவித்துள்ளது.

மேலும், தமிழகத்தில் மொத்தம் 6 பேர் தனிமைப்படுத்தப்பட்ட பிரத்தியேக வார்டில் மருத்துவக் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறியுள்ள தமிழக பொது சுகாதாரத் துறை இயக்குநரகம், அந்த 6 பேரில் 3 பேர் சென்னை ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையிலும், எஞ்சிய 3 பேர் திருச்சி, திருவண்ணாமலை மற்றும் ராமநாதபுரம் அருகேயுள்ள அரசு மருத்துவமனையில் தலா ஒருவர் வீதமும் தொடர் மருத்துவ கண்காணிப்பில் வைக்கப்பட்டு இருக்கின்றனர் எனவும் தெரிவித்துள்ளது.

# மீண்டும் நான் வருவேன்!

## என்கிறார் விஜயகாந்



நான் நலம் பெற்று மீண்டுவருவேன்என்று நடிகர் விஜயகாந்த் கூறியிருக்கின்றார்.

ஊரக உள்ளாட்சித் தேர்தலில் விஜயகாந்தின் தே.மு.தி.க. சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர்கள், அக்கட்சியின் பொதுச்செயலாளர் விஜயகாந்தைச் சந்தித்து வாழ்த்து பெறும் நிகழ்ச்சி சென்னை கோயம்பேட்டிலுள்ள தே.மு.தி.க. தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் பேசிய பிரேமலதா விஜயகாந்த், கூட்டணி தர்மத்தை கடைபிடிக்கும் ஒரே கட்சி தே.மு.தி.கதான் என்றார்.

கூட்டணி என்பதால் குட்டக் குட்ட குனிய மாட்டோம் என பிரேமலதா விஜயகாந்த் தெரிவித்தார்.

பின்னர் பேசிய விஜயகாந்த், தேர்தலில் வெற்றி பெற்றவர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார். மேலும் விரைவில் நலம் பெற்று மீண்டு வருவேன் என்றார்.

# அசாமில் எரியும் ஆறு!



எண்ணெய்க்குழாயில் ஏற்பட்ட வெடிப்பால் ஆற்று நீரின் மேற்பரப்பில் எண்ணெய் கசிந்து கொளுந்து விட்டு எரியும் தீ

அசாம் மாநிலத்தில் எண்ணெய்க் குழாயில் ஏற்பட்ட வெடிப்பின் காரணமாக, ஆற்று நீரின் மேற்பரப்பில் எண்ணெய் கசிந்து தீப்பிடித்து எரிந்து வருகிறது. திப்ருகர் மாவட்டத்திலுள்ள சசோனி கிராமப் பகுதியில் ஓடும் புர்கி டைகிங் (Burhi Dihing) ஆற்றின் மேற்பரப்பு, கடந்த 3 நாள்களுக்கும் மேலாகத் தீப்பிடித்து எரிந்து வருவதாக அந்தக் கிராம மக்கள் தெரிவித்துள்ளனர்.

அந்த ஆறு வழியாக செல்லும் ஒயில் இந்தியா லிமிட்டட் நிறுவனத்தின் எண்ணெய்க்குழாயில் கசிவு ஏற்பட்டதாகவும், அதற்கு மர்மநபர்கள் தீவைத்திருக்கலாம் எனச் சந்தேகிப்பதாகவும் அப்பகுதி மக்கள் கூறியுள்ளனர். இது குறித்து அரசு அதிகாரிகளுக்கு தகவலளித்தும், இதுவரை தீயை அணைக்க எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என குற்றம்சாட்டும் கிராம மக்கள், தொடர்ந்து எரிந்து வரும் தீயால் அச்சமடைந்துள்ளனர்.

# ஏரியில் படகு கவிழ்ந்து விபத்து

*ஒடிசா மாநிலம் குர்தா எனும் இடத்தில் உள்ள சிலிக்கா ஏரியில் மீனவர்களைச் சுமந்து சென்ற படகு கவிழ்ந்து 25 பேர் நீரில் மூழ்கினர்.*

*ஆயினும் அங்கிருந்த இதர மீனவர்களும் பொதுமக்களும் நீரில் மூழ்கியவர்களை உயிருடன் மீட்டனர். இதனால் அந்த 25 மீனவர்களும் உயிர் பிழைத்தனர். இதில் இரண்டு பேர் பெர்ஹாம்புர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*



# சீனாவில் கொரோனா வைரஸ் தாக்கம்; நூற்றுக்கணக்கான திருமணங்கள் ரத்து

பீஜிங்,பெப்.04

சீனாவில் இந்த ஆண்டு பெப்ரவரி 2 ஆம் திகதி (நேற்று) சிறப்பு வாய்ந்த அதிர்ஷ்ட நாளாகக் கருதப்பட்டது. ஏனெனில் 02.02.2020 என்ற திகதியை பின்பக்கமாக வாசித்தாலும் ஒரே மாதிரியே இருக்கும்.

இதனால் இந்த அதிர்ஷ்ட நாளில் திருமணம் உள்ளிட்ட சுபகாரியங்களை நடத்த சீன மக்கள் முன்னரே திட்டமிட்டு அதற்கான ஏற்பாடுகளை செய்து வைத்திருந்தனர். ஆனால் தற்போது அங்கு கொரோனா வைரஸ் தொற்று நோய் அதி வேகத்தில் பரவிவருவதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பெப்ரவரி 2ஆம் திகதி திருமணங்களை நடத்த வேண்டாம் என மக்களுக்கு அரசு வேண்டுகோள் விடுத்தது.

இது குறித்து சீன மக்கள் நலத்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், பெப்ரவரி 2 ஆம் திகதி அதிர்ஷ்ட நாள் என்று நிச்சயிக்கப்பட்ட திருமணங்களை ரத்து செய்து விடுங்கள். தற்போது நிலவும் சூழ்நிலையை மற்றவர்களுக்கு விவரியுங்கள் எனத் தெரிவிக்கப்பட்டது.

அரசின் இந்த வேண்டுகோள் காரணமாக சீனாவில் ஞாயிறன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான திருமணங்கள் ரத்து செய்யப் பட்டன. இது, அதிர்ஷ்ட நாளில் தங்களின் திருமணத்தை நடத்த வேண்டுமெனத் திட்டமிட்டிருந்த மணமக்களுக்குப் பெரும் ஏமாற்றம் அளித்தது.

இதற்கிடையில் திருமணங்கள் நடத்த வேண்டாம் எனக் கேட்டுக்கொண்ட சீன அரசு, இறுதிச் சடங்கு நிகழ்ச்சிகளை விரைவாகவும், அதிக கூட்டம் இல்லாமலும் நடத்த வேண்டும் என்று அறிவுறுத்தி உள்ளது.


அதிலும் குறிப்பாக கொரோனா வைரஸ் பாதிப்பால் உயிரிழந்தவர்களின் உடலை உடனடியாக அடக்கம் செய்ய வேண்டும் என எச்சரித்துள்ளது.



# லண்டனில் பொதுமக்களைக் கத்தியால் குத்திய பயங்கரவாதி சுட்டுக் கொலை

லண்டன்,பெப்.04

லண்டனில் பொதுமக்களை கத்தியால் குத்திய பயங்கரவாதி எனக் கருதப்படும் ஒருவரைப் பொலிஸார் சுட்டுக் கொன்றனர்.



இங்கிலாந்து தலைநகர் லண்டனில் உள்ள ஸ்டிரெதாம் பகுதியில் ஞாயிறு மதியம் 2 மணி அளவில் ஒருவர் தன் கையில் வைத்திருந்த கத்தியால் பொதுமக்களை சரமாரியாக குத்தினார். இதுபற்றி தகவல் கிடைத்ததும் பொலிஸார் விரைந்து வந்தனர். அவர்கள் பொதுமக்களை விலகிச் செல்லும்படி கூறிவிட்டு அந்த நபரைத் துப்பாக்கியால் சுட்டுக்கொன்றனர். அந்த நபர் பயங்கரவாதியாக இருக்கலாம் எனசந்தேகப்படுகிறார் எனப்பொலிஸார் கூறினர். இது குறித்து அவர்கள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அந்த நபர் தாக்கியதில் பலர் காயம் அடைந்தனர். நேரில் பார்த்தவர்கள் கூறும்போது, அந்த நபரிடம் கத்தி இருந்ததாகவும், பொலிஸார் மக்களைவிலகும்படி கூறிவிட்டு 3 முறை துப்பாக்கியால் சுட்டனர் எனவும் தெரிவித்தனர். இதுபற்றி மேலும் விசாரணை நடந்து வருகிறது.

கடந்த நவம்பர் 29 ஆம் திகதி உஸ்மான்கான் என்ற தண்டனை பெற்ற பயங்கரவாதி 2 பேரைக் கத்தியால் குத்தி கொலை செய்தமையும், அவரைப் பொலிஸார் சுட்டுக்கொன்றமையும் குறிப்பிடத்தக்கவை.

# ஈராக்கின் புதிய பிரதமர் முகமது தவுபிக் அலாவி

பாக்தாத்,பெப்.04

ஈராக்கின் புதிய பிரதமர் முகமது தவுபிக் அலாவி நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

ஈராக்கில் ஊழல் மற்றும் வேலையின்மை அதிகரித்து வருவதை கண்டித்து, பிரதமர் அப்துல் மஹ்திக்கு எதிராக கடந்த ஒக்டோபர் மாதம் மக்கள் போராட்டத்தில் குதித்தனர்.

நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் வீதிகளில் திரண்டு நடத்திய போராட்டத்தை அரசு இரும்பு கரம் கொண்டு ஒடுக்கியது. பொலிஸார் மற்றும் இராணுவ வீரர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் சுமார் 400 போராட்டக்காரர்கள் கொல்லப்பட்டனர்.

ஆனாலும் மக்களின் போராட்டம் ஓயாமல், மாறாக நாளுக்குநாள் மேலும் தீவிரமடையத் தொடங்கியது. இது அப்துல் மஹ்திக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியதைத் தொடர்ந்து, கடந்த நவம்பர் மாத இறுதியில் அவர் தனது பிரதமர் பதவியை ராஜினாமா செய்தார்.

அதன்பிறகு நாடாளுமன்றத்தால் முன்மொழியப்பட்ட பிரதமர் வேட்பாளர்களை நிராகரித்த போராட்டக்காரர்கள், மக்களுக்கு ஆதரவான நபரைப் பிரதமர் பதவியில் அமர்த்த வலியுறுத்தித் தொடர்ந்து



போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், ஈராக்கின் புதிய பிரதமராக முன்னாள் தகவல் தொடர்பு துறை அமைச்சர் முகமது தவுபிக் அலாவியை, அதிபர் பர்ஹாம் சாலி நியமித்துள்ளார். அவரது தலைமையில் புதிய அரசை உருவாக்க ஒரு மாத காலம் அவகாசம் வழங்கப்பட்டு உள்ளது. முகமது தவுபிக் அலாவி பிரதமராக பொறுப்பேற்ற உடனே, அரசுக்கு எதிராக நடந்து வரும் மக்களின் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தார்.

மேலும் அவர், போராட்டக்காரர்களின் உயிரிழப்புக்கு காரணமானவர்களை தண்டிப்பேன் என்றும், ஊழலை எதிர்த்து போராடுவேன்என்றும்உறுதியளித்துள்ளார்.

# சுரங்கத் தொழிலாளர் 9 பேர் கல்லால் அடித்துக் கொலை

## தென்னாபிரிக்காவில் பயங்கரம்

கேப்டவுன்,பெப்.04

தென்னாபிரிக்காவில் சுரங்க தொழிலாளர்கள் 9 பேர் கல்லால் அடித்துக் கொலை செய்த பயங்கரம் இடம்பெற்றுள்ளது.



தென்னாபிரிக்காவின் ஜோகன்னஸ்பெர்க் நகரில் சட்டவிரோதமான முறையில் ஏராளமான நிலக்கரி சுரங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த சுரங்கங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் வேலை பார்த்து வருகின்றனர்.

இந்தச் சட்ட விரோத சுரங்கங்களுக்கு இடையே கடுமையான தொழில் போட்டி நிலவுகிறது. இதனால் ஒரு சுரங்கத்தில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் மற்றொரு சுரங்கத்தின் தொழிலாளர்களுடன்



மோதலில் ஈடுபடுவது வழக்கமாக உள்ளது.

இந்த நிலையில், ஜோகன்னஸ்பெர்க்கில் லெசோதோ என்ற இடத்தில் உள்ள சட்டவிரோத நிலக்கரி சுரங்கத்தில் சோதனை நடத்த பொலிஸார் சென்றனர். அப்போது சுரங்கம் அமைந்துள்ள வீதியில் 9 பேர் பிணமாகக் கிடந்ததை கண்டு அவர்கள் அதிர்ந்தனர்.

அவர்கள் சட்ட விரோத நிலக்கரி சுரங்கத்தின் தொழிலாளர்கள் என்பதும், அவர்கள் அனைவரும் கல்லால் அடித்தே கொலை செய்யப்பட்டிருப்பதும் தெரியவந்தது. எனினும் இந்த கொடூர செயலில் ஈடுபட்டது யார் என்பது தெரியவில்லை.

உலகிலே அதிக அளவில் வன்முறை நடக்கும் நாடுகளில் தென்னாபிரிக்காவும் ஒன்று. அந்த நாட்டு அரசு தகவல்களின்படி அங்கு ஒரு நாளுக்கு 58 கொலைகள் நடக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# பிரார்த்தனை கூட்ட நெரிசலில் சிக்கி இருபது பேர் உயிரிழப்பு

## கிளிமாஞ்சாரோ பிராந்தியத்தில் சம்பவம்



தான்சானியாவில் கிறிஸ்தவ பிரார்த்தனை கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டதில் 20 பேர் உயிரிழந்தனர்.

அந்நாட்டின் வடகிழக்கு பகுதியில் உள்ள கிளிமாஞ்சாரோ பிராந்தியத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது. வாம்போசா என்பவர் பிரார்த்தனைக் கூட்டத்தை நடத்தியபின், கையில் இருந்த குடுவையில் புனித எண்ணெய் இருப்பதாகக் கூறி தரையில் ஊற்றினார்.

அதைத் தொட்டால் நோய்கள் குணமாகும் என நம்பிய மக்கள் ஒருவரையொருவர் முண்டியடித்துக்கொண்டு முன்னே சென்றனர். அப்போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 20 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும் 16 பேர் படுகாயம் அடைந்த நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

# ரணிலுக்கு அரியாசனம்! சஜித்துக்கு அஞ்ஞாசனம்! அடுத்த இலக்கு யார்?

பனங்காட்டான்

ஜனாதிபதி பதவி வேண்டாம், பிரதமர் பதவி வேண்டாம், எதிர்கட்சித் தலைவர் பதவியும் வேண்டாம். எட்டாத பழங்களை எட்டிப் பறிக்க முனைந்து எதற்காக மூக்குடைபட வேண்டும்? கட்சித் தலைமை பதவியை எவ்வாறாவது காப்பாற்றிக் கொள்ள கிழட்டுநரியின் வாரிசான குள்ளநரி எவரையும் கிடங்குக்குள் தள்ளப் பின்னிற்காது. மோதுபவர்களுக்கு அஞ்ஞாசனம்தான்.

கடந்த செப்டம்பர் மாத இறுதியில் இந்தப் பத்தியில் என்னால் எழுதப்பட்ட ரணிலின் தலைமைப் பதவி தொடர்பான விடயத்திலிருந்து இந்த வாரப் பத்தியை ஆரம்பிப்பது பொருத்தமானது.

அந்தக் கட்டுரையின் முதற் பந்தியில் தடித்த எழுத்தில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தேன்:

'ஜனாதிபதி வேட்பாளராவதைவிட தலைவர் பதவியை தம்முடன் வைத்திருப்பதில் ரணில் ஏன் அக்கறை காட்டுகிறார்? அப்பதவி தம்மிடம் இருந்தாலே பிரதமர் அல்லது எதிர்க்கட்சித் தலைவராகலாம் என்பது அவருக்குத் தெரியும். சஜித் வென்றாலென்ன, தோற்றாலென்ன தமக்குரிய இடம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்றால் கட்சித் தலைமை தம்மிடம் இருக்க வேண்டுமென்பதை அறிந்தே ரணில் காய்களை நகர்த்துகிறார் என்று அதில் குறிப்பிட்டிருந்தேன்.

அந்தக் கட்டுரையில் சுட்டியிருந்த சில பந்திகளை இப்போது மீள்வாசிப்புக்கு உட்படுத்துவது காலத்தின் தேவையாக இருப்பதால் அந்த ஏழு பந்திகளையும் சுருக்கமாகத் தருகிறேன்.

1. நல்லாட்சிக் காலத்தில் பல வழக்குகளில்



மஹிந்த, அவரது மனைவி, அவரது மகன்மார் மற்றும் கோட்டாபய ஆகியோர் மீது எந்தச் சட்டமும் பாயாது அவர்களுக்கு சகல பாதுகாப்புகளையும் அளித்தவர் ரணில்தான்.

2. இந்தப் பின்னணியில் மஹிந்த குடும்பம் ஆட்சிக்கு வருவதையோ, கோட்டாபய ஜனாதிபதியாக வருவதையோ ரணில் தமக்கு ஆபத்தாகப் பார்க்கவில்லை. ஒருவகையில் தமக்குப் பாதுகாப்பாகவே இதனை அவர் கருதுகிறார்.

3. ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டு மீண்டும் தோற்றவர் என்ற களங்கத்தை ஏற்படுத்திக் கொள்ள ரணில் இப்போது விரும்பவில்லை.

4. ஜனாதிபதித் தேர்தலில் சஜித்தை போட்டியிடுவதாக அறிவித்து, கோட்டாபயவுடன் அவர் தோல்வியடைந்தால் அத்துடன் அவரது அரசியல் வாழ்க்கை அஞ்ஞாதவாசம் அடைந்துவிடும் என்பது ரணில் போட்ட கணக்கு.

5. சஜித் ஜனாதிபதிப் பதவிக்கு போட்டியிடுவது எந்த ரீதியிலும் தமது ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் என்ற வகையில் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தாது என்றமுறையில் ரணில் முற்கூட்டியே நிச்சயித்துவிட்டார்.

6. நாற்பத்தியிரண்டு வருட அரசியலில் நான்கு தடவை பிரதமராக இருந்தவர், பல தடவை எதிர்க் கட்சித் தலைவராக இருந்தவர். பல அமைச்சர் பதவிகளை வகித்தவர். குடும்ப வாரிசாக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் பதவியில் தாமே தொடர வேண்டுமென்பது ரணிலின் இலக்கு.

7. கட்சித் தலைவராக இருந்தால் மட்டுமே வெற்றி பெற்றாலென்ன, தோல்வி அடைந்தாலென்ன அரசியல் உயர்பீடக் கதிரையில் அமரும் வாய்ப்பு எப்போதும் இருக்கும்.

– இவ்வாறு நான்கு மாதங்களுக்கு முன்னர் எழுதப்பட்டது இப்போது செயல்வடிவம் கொடுக்கிறது. இப்போதைய கட்சிச் சமாசாரங்களை இனிக் கவனிப்போம்.

ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு கூட்டம் ஜனவரி 30ஆம் திகதி நடைபெற்றது. இக்குழுவின் பல வெற்றிடங்களுக்கு தமக்கு நம்பிக்கையான பலரை ரணில் அண்மையில் நியமித்திருந்தார்.

72 உறுப்பினர்களைக் கொண்ட புதிய செயற்குழுவில் 22 பேரைத் தவிர மிகுதி 50 பேர் இக்கூட்டத்தில் பங்குபற்றினர். இதில் 37 பேர் ரணில் தொடர்ந்து தலைவர் பதவியை வகிக்கும் தீர்மானத்தை ஆதரித்தனர்.

72 உறுப்பினர்களில் 37 உறுப்பினர்கள் ரணிலை ஆதரித்தமை என்பது 50 வீதத்துக்கும் அதிகமானது



என்பதைக் காட்டுகிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது ரணிலுக்கு எதிராக நின்று சஜித்தை ஆதரித்த மங்கள சமரவீர, மலிக் சமரவிக்கிரம ஆகியோர் இப்போது பல்டி அடித்து ரணில் பக்கம் தாவி விட்டனர். தொடர்ந்தும் சஜித்துக்கு ஆதரவாக இருந்துவரும் கொழும்பு நகர முதல்வர் றோஸி சேனநாயக்க, முன்னாள் சபாநாயகர் பாக்கீர் மாக்காரின் மகன் இம்தியாஸ் ஆகியோரை ரணில் 'அட்வான்ஸாக' கட்சியிலிருந்து கல்தா கொடுத்துவிட்டார்.

சஜித் ஜனதிபதித் தேர்தலில் வெற்றிபெற மாட்டாரென்று தெரிந்து கொண்டு அவரை ரணில் வேட்பாளராக நியமித்தமை ஒருவகையான அரசியல் சூத்திரம். சஜித் தோல்வியடைய வேண்டுமென்பதே அதன் இலக்கு. தாம் தோற்றதற்கு ரணிலும் ஒரு காரணம் என சஜித் பின்னர் குற்றம் சாட்டியிருந்தமை இங்கு பார்க்கப்பட வேண்டியது.

ரணிலைச் சுற்றியிருந்தவர்களை ஆயுதமாக்கி அவரைப் பதவியிறக்கக் கடந்த சில வாரங்களாக சஜித் கடுமையாக உழைத்தார்.

ஐக்கிய தேசிய கட்சிக்குள் இருந்துவந்த தகவல்களும் ஊடகங்களின் செய்திகளும் ரணிலைப் பல வீனப்பட்டவராகக் காட்டி, அவர் தலைமைப் பதவியிலிருந்து இறங்கும் நேரம் வந்துவிட்டதாக கூறி வந்தன.

ஆனால், ரணில் என்ற அரசியல்வாதி புல்லுக்குள் படுத்துக் கிடக்கும் பாம்பு போன்றவர் என்பதை பலரும் அறிந்திருக்கவில்லை.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன என்ற கிழட்டு நரியின் பெறாமகனான (ஆங்கிலத்தில் மருமகன்) ரணில் ஒரு குள்ளநரி என்பதை இப்போது நிரூபித்து வருகிறார். இவரின் அஸ்தமனத்தைப் பார்க்க விரும்பியவர்கள் இவரின் மீள் எழுச்சியை பார்த்து வியந்து நிற்கின்றனர்.

ரணில் அரசியல் வானில் ஒரு சுழியன் என்பதை அறிய வேண்டுமானால் அவரின் பரம்பரையைப் பார்க்க வேண்டும்.

லேக்ஹவுஸ் என்ற பாரிய ஊடக விருட்சத்தின் நிறுவனர் (அமரர்) டி.ஆர்.விஜேவர்த்தனவின் பேரனே ரணில். அதாவது மகள் நளினியின் மகன் ரணில்.

இலங்கையில் பல அரசியல் கட்சிகளை ஆழப்புதைத்து ஆட்சி மாற்றங்களை ஏற்படுத்தி ஐக்கிய தேசிய கட்சியை சிம்மாசனத்தில் ஏற்றுவதையே லேக்ஹவுஸ் தனது கொள்கையாக மேற்கொண்டு வந்தது.

ரணிலின் தந்தை எஸ்மன்ட் விக்கிரமசிங்க. இவரை இலங்கை அரசியலில் பீஷ்மர் என்பர். குறிவைத்து அரசியல் காய்களை நகர்த்தும் இவர் ஜே.ஆரின் குசினி அரசியலின் பிரதானியாக இருந்தவர்.

ரணிலின் தாய்மாமன் ரஞ்சித் விஜேவர்த்தன. இவரது நிர்வாகத்தில் லேக்ஹவுஸ் இருந்தபோதே சிறிமாவோ பண்டாரநாயக்க அதனை சுவீகரித்து அரசுடமையாக்கினார். தற்போது 'டெய்லி மிறர்', 'சண்டே ரைம்ஸ்' ஆகிய பத்திரிகை நிறுவனங்களின் உரிமையாளர் இவர்.

முன்னாள் பிரதமர் டட்லி சேனநாயக்கவின் சகோதரரான றொபேர்ட் சேனநாயக்கவின் மகளைத் திருமணம் செய்தவர் ரஞ்சித் விஜேரத்தின. இத்தம்பதியரின் புதல்வர் றுவான் விஜேயவர்த்தன. இவர் ஒரு நாடாளுமன்ற உறுப்பினர். ரணிலின் நல்லாட்சி அரசில் துணைப்பாதுகாப்பு அமைச்சராக இருந்தவர்.

ரணிலின் தாயாரின் ஒன்றுவிட்ட சகோதரர் (அமரர்) உபாலி விஜேவர்த்தன. ஜனாதிபதித் தேர்தலுக்கு பிரேமதாஸவுக்கு எதிராக ஜே.ஆரால் வளர்க்கப்பட்டவர் இந்த உபாலி. ஐலண்ட் பத்திரிகை நிறுவனம், உபாலி வாகனத் தயாரிப்பு நிறுவனம், டெல்டா சொக்கலேட் நிறுவனம் போன்றவற்றின் அதிபரான கோடீஸ்வர வர்த்தகர் உபாலி 1983 பெப்ரவரி 13 ஆம் திகதி மலேசியாவிலிருந்து தமது சொந்த விமானத்தில் கொழும்பு திரும்பிக் கொண்டிருந்த போது இடைநடுவில் காணாமல்போனவர். இன்னும் அவரது சடலம் கூட மீட்கப்படவில்லை.

சிறிமாவோ பண்டாரநாயக்கவின் சகோதரரான பார்ண்ஸ் ரத்வத்தையின் மகளான லக்மியை உபாலி திருமணம் செய்தவர் என்பது வேறு விடயமானாலும், அரசியலுடன் சம்பந்தப்பட்டது.

1977ம் ஆண்டுத் தேர்தலில் தமது அரசியல் வாரிசாக ரணிலைக் கொண்டு வந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன பிரதியமைச்சர் பதவியிலிருந்து முக்கிய அமைச்சர் பதவிகளை வழங்கி அழகு பார்த்தவர்.

இலங்கை அரசியலலைப் பொறுத்தளவில் பள்ளித்தோழர்களான இருவர் ராசியில்லாத ராசாக்கள். இரண்டு பிரதமர்களின் ஏக புதல்வனாகப் பிறந்த அனுர பண்டாரநாயக்கவால் ஒரு தடவை கூட அப்பதவிக்கு வர முடியவில்லை. முதலாவது ஜனாதிபதியாக பதவி வகித்த ஜே.ஆரின் அரசியல் வாரிசான ரணிலால் ஒரு தடவைகூட ஜனாதிபதி கதிரையில் அமர முடியவில்லை.

கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தல்களிலும் தாம் போட்டியிடாது பொதுவேட்பாளர்களை நிறுத்தி தம்மைத் தோல்வியிலிருந்து காப்பாற்றிக் கொண்டவர் ரணில் விக்கிரமசிங்க. சரத் பொன்சேக, மைத்திரிபால சிறிசேன, சஜித் பிரேமதாஸ ஆகியோரே ரணிலால் முன்மொழியப்பட்ட ஜனாதிபதி வேட்பாளர்கள். இவர்களில் மைத்திரிபாலாவால் மட்டுமே வெற்றி பெற முடிந்தது.

ஆனாலும், மைத்திரியும் ரணிலும் வெவ்வேறு துருவங்களாக ஒரே ஆட்சியில் இருந்தமையால் மைத்திரிக்கு இரண்டாம் வாய்ப்புக் கிடைக்கவில்லை. இதுவும் கூட ரணிலின் குள்ளத்தனத்தால்தான்.

மஹிந்தவிடமிருந்து பிரிந்து ரணில் மற்றும் சந்திரிகா தரப்புடன் கூட்டுச் சேர்ந்தமையால் மைத்திரி ஒரு தடவையாவது ஜனாதிபதியானார். ஆனால் சஜித்தை ஜனாதிபதி வேட்பாளராக நியமித்தும்



அவரை தோல்வியடையச்செய்தவர் இதே ரணில்தான்.

ஜனாதிபதி பதவி வேண்டாம், பிரதமர் பதவி வேண்டாம், எதிர்க்கட்சித் தலைவர் பதவியும் வேண்டாம் – கட்சித் தலைமைப் பதவி மட்டுமே வேண்டுமென்பது ரணிலின் கொள்கை. பரம்பரையாக வந்த பதவி ஆயுட்காலம் முழுவதும் தமக்கானது என்பது இவரது எண்ணம்.

சம்பந்தனுக்கு கட்சித் தலைமைப் பதவியுள்ள வரை கொழும்பு பங்களா கிடைத்தது போன்று, பரம்பரை வழியாக கிடைத்த கட்சித் தலைமை ஆயுள் வரை தமக்கானது என்பது ரணிலின் இடையறாக் கொள்கை.

இவ்விடயத்தில் ரணில் எப்போதுமே ராசிக்காரன் தான். அதனால்தான் போலும் கூட்டமைப்பு அவரோடு என்றுமே நட்புடன் இருக்க விரும்புகிறது.

# காணாமல் ஆக்கப்பட்டோர் வேண்டுமென்றால் மண்ணுக்குள் தோண்டித்தான் எடுக்கவேண்டும்

## அமைச்சர் விமல் வீரவன்ஸவின் திமிர்க் கருத்து

கொழும்பு, பெப். 04

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோர் எனக் கூறப்படுபவர்கள் எவரும் இன்று உயிருடன் இல்லை. அவர்களின் உயிரிழப்புக்கு ராஜபக்ஷாக்கள் பொறுப்பு அல்லர். இதற்கு விடுதலைப்புலிகள்தான் முழுப்பொறுப்பு. இப்படியான நிலையில் காணாமல் ஆக்கப்பட்டோர் வேண்டுமெனில் அவர்களை மண்ணுக்குள்தான் தோண்டி எடுக்க வேண்டும்.

– இவ்வாறு அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் மாநாடு நெருங்குகின்ற வேளையில், வடக்கு – கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் கோங்களும் வலுப்பெறுகின்றன.



காணாமல் ஆக்கப்பட்டோருக்கு ராஜபக்ஷாக்கள்தான் பொறுப்பு என்ற விதத்தில் அவர்களின் கோஷங்கள் அமைகின்றன.

இப்படிக் கோங்களை எழுப்புவதாலோ அல்லது ஐ.நா. சென்று முழங்குவதாலோ அல்லது சர்வதேச விசாரணையை நடத்துவதாலோ காணாமல் ஆக்கப்பட்டோரை உயிருடன் மீட்க முடியாது. அத்துடன் ராஜபக்ஷாக்களையும் பொறுப்புக்கூற வைக்க முடியாது.

வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோர் அனைவரும் உயிரிழந்து விட்டார்கள் எனவும், இதற்கு விடுதலைப்புலிகளே பொறுப்பு எனவும் ராஜபக்ஷ தரப்பினர் ஏற்கனவே அறிவித்து விட்டார்கள்.

தற்போது, காணாமல் ஆக்கப்பட்டோரும் உயிருடன் இல்லை. விடுதலைப்புலிகளின் தலைமையும் உயிருடன் இல்லை. எனவே, காணாமல் ஆக்கப்பட்டோர் வேண்டுமெனில் அவர்களை, அவர்களின் உறவுகள் மண்ணுக்குள்தான் தோண்டி எடுக்க வேண்டும் – என்றார். (ஐ)

# எனக்கு ஏற்பட்ட நிலைமையே கோட்டாபயவுக்கும் வந்துள்ளது

## கவலையடைகின்றார் மைத்திரி

கொழும்பு, பெப். 04

2015ஆம் ஆண்டு தான் ஜனாதிபதியாக வந்தபோது தனக்கு ஏற்பட்ட நிலைமையே தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஏற்பட்டுள்ளது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பொலனறுவையில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

எனக்கும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது. அது இரகசியம் அல்ல. நான் நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற ஒரே எண்ணத்துடனேயே செயற்பட்டேன். நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என செயற்பட்டேன். இதன்போது எங்களுக்குள் சில முரண்பாடுகள் ஏற்பட்டன.

நான் 2015ஆம் ஆண்டு ஜனாதிபதியாக வந்தபோது எனக்கு ஏற்பட்ட நிலைமையே தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் ஏற்பட்டுள்ளது. அதாவது நான் ஜனாதிபதியாக வந்தபோது நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சியினருக்கே பெரும்பான்மை அதிகமாக இருந்தது. அதாவது மஹிந்த ராஜபக்ஷவுக்கே பலம் அதிகமாக இருந்தது.

ஆனால் அவர் எனக்கு மிகவும் ஒத்துழைப்பு வழங்கினார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பொறுப்பையும் எனக்கு வழங்கினார். அதன் பின்னர் நாங்கள் அனைவரும் இணைந்து பணியாற்றினோம்.

ஆட்சிக்கு வந்த முதல் மாதத்திலேயே போதைப் பாவனையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சிகரட் பைக்கெற்றுகளின் பின்புறத்தில் கான்சர் நோயாளி ஒருவரின் புகைப்படத்தை அச்சிடச் செய்தேன்.

அத்தோடு பல திட்டங்களையும் அமுல்படுத்தினேன். இதைச் செய்ய முடிந்தமைக்கான காரணம் அன்று மஹிந்த ராபக்ஷ தரப்பினர் எனக்கு நாடாளுமன்றத்தில் வழங்கிய ஒத்துழைப்பே ஆகும்.

ஆனால் இன்று அவ்வாறான சூழ்நிலை இல்லை.



அதனாலேயே மார்ச் மாத ஆரம்பத்தில் நாடாளுமன்றத்தைக் களைத்து, ஏப்ரல் மாதத்தில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கோட்டாபயவுக்கு ஆதரவு வழங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கடந்த ஒக்ரோபர் மாதமே தீர்மானித்தது. அதன்பின்னர் ஜனாதிபதியுடனும் பொதுஜன பெரமுனவுடனும் ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டோம்.

அதன் பின்னரான கடந்த ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆதரவும் இருந்தமையாலேயே ஜனாதிபதி கோட்டாபய அதிகூடிய வாக்குகளால் வெற்றி பெற்றார்.

இந்நிலையில் பொருளாதார நெருக்கடியிலிருந்து ஜனாதிபதி நாட்டை கட்டியெழுப்ப அனைவரும் ஒன்றிணைந்து அவருடன் இணைந்து செயற்பட வேண்டும் – என்றார். (ஐ)

# 6 பேருக்கு கதவடைத்த ரணில்!



கொழும்பு, பெப். 04

ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான புதிய கூட்டணியின் செயலாளராக அஜித் பி பெரேரா, சுஜீவ சேனாசிங்க, நளின் பண்டாரா, ரஞ்சித் மத்தும பண்டார, கபீர் ஹாஷிம், திஸ்ஸ அத்தநாயக்க ஆகியோரை நியமிக்க வேண்டாமென சஜித்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார் ஐ.தே.கவின் தலைவர் ரணில் விக்ரமசிங்க.

மேற்படி ஆறு பேரில் யாரையும், புதிய கூட்டணியின் செயலாளராக நியமிக்கவேண்டமெனக் கேட்டுள்ளார்.

கடந்த காலத்தில் அதிருப்தியாளர்களாக, பகிரங்க விமர்சனங்களை முன்வைத்திருந்த இவர்களுடன் இணைந்து பணியாற்ற முடியாது என ரணில் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த பொதுத் தேர்தலில் ஐ.தே.க. தலைமையில் ஒரு பரந்த கூட்டணியை உருவாக்கவேண்டும் என்று கட்சியின் செயற்குழு முடிவு செய்தது. அத்துடன் கூட்டணியின் பொதுச் செயலாளரைப் பரிந்துரைக்கும் அதிகாரம் சஜித் பிரேமதாஸவுக்கு வழங்கப்பட்டது.

ஆகவே, மேற்கண்ட ஆறு பேரைத் தவிர வேறு ஒருவரின் பெயரை முன்மொழிய வேண்டும் என்றும், 6 ஆம் திகதி நடைபெறவுள்ள அடுத்த செயற்குழுக் கூட்டத்தில் பெயர் முன்மொழியப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்றும் விக்ரமசிங்க கோரியுள்ளார். (ஐ)

# எல்ல காட்டுப் பகுதியில் தீ

கொழும்பு, பெப். 04

எல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல அல்ப கொடமடித்த காட்டுப் பகுதியில்



ஏற்பட்ட தீ தொடர்ந்து இரண்டு நாட்களாக பரவி வருகின்றது.

இந்தத் தீயினால் 7 ஏக்கருக்கு மேற்பட்ட பகுதி எரிந்து நாசமடைந்துள்ளதாக பொலிஸார் நேற்றுத் திங்கட்கிழமை தெரிவித்தனர்.

தற்போது இந்தப் பிரதேசங்களில் நிலவிவரும் கடும் வெயில் மற்றும் கடும் காற்று வீசுவதால் தீயைக் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வருவதில் தாமதம் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தீ ஏற்பட்டதற்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.



காலைக்கதிர்
Kalaikathir



# இந்திய அணி சாதனை



இந்தியா மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஐந்தாவதும் இறுதியுமான ரி – 20 போட்டியிலும் இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் 5 – 0 என்ற கணக்கில் நியூசிலாந்தை இந்திய அணி வெள்ளையடிப்புச் செய்து சாதனை படைத்துள்ளது.

இந்தியா – நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான 5ஆவதும் இறுதியுமான ரி – 20 போட்டி மவுண்ட் மவுங்கானுயில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தது.

அதன்படி களமிறங்கிய அவ்வணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 3 விக்கெட் இழப்பிற்கு 163 ஓட்டங்களை எடுத்தது. இந்திய அணி சார்பில் துடுப்பாட்டத்தில் அதிகபட்சமாக ரோஹித் சர்மா 60 ஓட்டங்களையும், கே.எல்.ராகுல் 45ஓட்டங்களையும்பெற்றுக்கொடுத்தனர். நியூசிலாந்து அணியின் பந்துவீச்சில் குகலிஜின் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

பின்னர் 164 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து அணியின் தொடக்க வீரர்கள் அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர்.

நடுவரிசையில் களமிறங்கிய ரோஸ் டெய்லர் அரைச்சதம் குவிக்க நியூசிலாந்து அணியால் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக்கெட்டுகள் இழப்பிற்கு 156 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது. இதனால் இந்தியா 7 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் ஐந்து போட்டிகளிலும் வெற்றி பெற்று நியூசிலாந்தை வயிட் வோஷ் செய்து சாதனைப் படைத்தது இந்தியா. 3 விக்கெட்டுகளை வீழ்த்திய பும்ரா ஆட்ட நாயகன் விருதை வென்றார். லோகேஷ் ராகுல் தொடரின் நாயகன் விருதை வென்றார்.

## சிக்ஸர் சென்ற பந்தை அற்புதமாக பிடித்து வீசினார் சஞ்சு சாம்சன்!



நியூசிலாந்து அணிக்கு எதிரான 5ஆவது மற்றும் கடைசி ரி – 20 போட்டியில் இந்திய வீரர் சஞ்சு சாம்சன் பவுண்டரியில் செய்த பீல்டிங்கை அனைவரும் பாராட்டி வருகின்றனர்.

மவுண்ட் மௌன்கானுய் மைதானத்தில் நடந்த போட்டியில் நியூசிலாந்தை வீழ்த்தி, தொடரை 5 – 0 என வென்ற இந்தியஅணிசாதனைபடைத்தது.

போட்டியில் ஆரம்ப துடுப்பாட்டகாரராகக் களமிறங்கிய சஞ்சு சாம்சன் 2 ஓட்டங்களில் நடையைக் கட்டி ரசிகர்களுக்கு ஏமாற்றத்தை அளித்தார்.

எனினும், பீல்டிங்கில் ஒரு பிடி மற்றும் ரன் அவுட் செய்து பட்டையைக் கிளப்பினார். அதுமட்டுமின்றி பவுண்டரியில் பறந்து சிக்ஸர் ஒன்றைத் தடுத்தது அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

நியூசிலாந்து இன்னிங்ஸின் போது 7ஆவது ஓவரை இந்திய வீரர் சர்துல் தாகூர் வீசினார். 7ஆவது ஓவரின் 6ஆவது பந்தை தாகூர் வீச துடுப்பாடி நியூசிலாந்து வீரர் ரோஸ் டெய்லர் பந்தை பறக்க விட்டார்.

அனைவரும் அது சிக்ஸர் என்று நினைக்க, பவுண்டரி கோட்டைத் தாண்டி பறந்து பந்தைப் பிடித்த சஞ்சு சாம்சன், பந்தை பவுண்டரி கோட்டுக்குள் வீசி சிக்ஸரை தடுத்து வியக்க வைத்தார்.

சஞ்சு சாம்சனின் அபார பீல்டிங் திறமையை கண்ட நியூசிலாந்து வீரர்கள் மட்டுமின்றி மைதானத்திலிருந்து ரசிகர்களும், தொலைக்காட்சியில் பார்த்து ரசிகர்களும் மிரண்டு போயினர்.

## கிராண்ட்ஸ்லாம் கிண்ணத்தை முத்தமிட்டார் ஜோகோவிச்!

ஆண்டின் முதலாவது கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற அவுஸ்ரேலியா பகிரங்க ரென்னிஸ் தொடரில், சேர்பியாவின் முன்னணி வீரரான நோவக் ஜோகோவிச் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

நடப்புச் சம்பியன் என்ற அந்தஸ்துடன் களமிறங்கிய நோவக் ஜோகோவிச், இம்முறை சம்பியன் பட்டம் வென்றதன் மூலம் ஆஸ்திரேலியா பகிரங்க ரென்னிஸ் தொடரில், எட்டாவது முறையாக சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

மகுடத்திற்கான இறுதிப் போட்டியில், நோவக் ஜோகோவிச், ஆஸ்திரியாவின் டோமினிக் தியேமை எதிர்கொண்டார்.

இரசிகர்களின் பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இப்போட்டியில், முதல் செற்றை ஜோகோவிச் 6 4 எனப் போராடி கைப்பற்றினார்.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது செற்றில், மீண்டெழுந்த டோமினிக் தியேம், செற்றை 6 4 என கைப்பற்றி பதிலடி கொடுத்தார்.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாவது செற்றிலும் ஆதிக்கம் செலுத்திய டோமினிக் தியேம், செற்றை 6 2 என எளிதாக கைப்பற்றினார்.

இதனால் கடும் நெருக்கடிக்குள்ளான நோவக் ஜோகோவிச், அடுத்த செற்களில் அவதானமாகவும், ஆக்ரோமாகவும் விளையாடத் தொடங்கினார்.

நான்காவது செற்றில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய நோவக் ஜோகோவிச், நான்காவது செற்றை 6 – 3 என கைப்பற்றினார்.

இருவரும் தலா இரண்டு செற்களை பகிர்ந்துக் கொண்டால், வெற்றியைத் தீர்மானிக்கும் ஐந்தாவது செற் மீதான எதிர்பார்ப்பு எகிறியது.

இதில் இருவரும் விட்டுக்கொடுக்காமல் சிறப்பாக விளையாடினர்.எனினும் இறுதி தருணத்தில் தனது அனுபவத்தை கொண்டு சிறப்பாக விளையாடிய நோவக் ஜோகோவிச், செற்றை 6 4 எனக் கைப்பற்றி சம்பியன் கிண்ணத்தை வென்றார்.

நோவக் ஜோகோவிச்சுக்கு இது எட்டாவது ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் சம்பியன் பட்டமாகும். இதற்கு முன்னதாக 2008, 2011, 2012, 2013, 2015, 2016, 2019ஆம் ஆண்டுகளில் அவர் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

இதுதவிர, நோவக் ஜோகோவிச் ஒட்டுமொத்தமாக 17 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார். இதில் எட்டு ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் சம்பியன் பட்டங்கள், ஒரு பிரான்ஸ் பகிரங்க ரென்னிஸ் சம்பியன் பட்டம், ஐந்து விம்பிள்டன் ரென்னிஸ் சம்பியன் பட்டங்கள், மூன்று அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் சம்பியன் பட்டங்கள் அடங்கும்.



## வீ மிஸ் யூ டோனி!

நியூசிலாந்து அணியின் நான்காவது ரி –20 போட்டியில் ரசிகர்கள் மிஸ் யூ டோனி என்ற பனரை வைத்திருந்தது வைரலாகியுள்ளது.



நியூசிலாந்து சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி முதலில் 5 போட்டிகள் கொண்ட டி – 20 தொடரில் பங்கேற்கிறது. இதன் 5 ரி –20 போட்டியிலும் இந்திய அணி வெற்றி பெற்றது.

இதற்கிடையில் இந்திய கிரிக்கெட் அணியின் ரசிகர்கள் சிலர் வீ மிஸ் யூ டோனி என்ற பனர் வைத்திருந்தனர். ரசிகர்கள் மத்தியில் டோனியின் வருகை குறித்து நாளுக்கு நாள் எதிர்பார்ப்பு அதிகரித்த வண்ணம் உள்ளது.

ஆனால் சர்வதேச கிரிக்கெட்டில் வருகை குறித்தும் அல்லது ஓய்வு குறித்தும் டோனி தனது நிலைப்பாட்டை இதுவரை வெளியிடவில்லை. கடந்த ஆண்டு இங்கிலாந்தில் நடந்த 50 ஓவர் உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் அரையிறுதி தோல்விக்கு பின் இந்திய அணியில் டோனி தொடர்ந்து புறக்கணிக்கப்பட்டு வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

## அச்சுறுத்தும் ஜடேஜா

இந்தியா அணியில் ஜடேஜா விளையாடுவதை உலகின் மற்ற அனைத்து அணிகளும் விரும்பவில்லை என இங்கிலாந்து அணியின் முன்னாள் சுழற்பந்துவீச்சாளர் கிரேம் ஸ்வான் கூறியுள்ளார்.

இங்கிலாந்தில் 2017 இல் நடந்த சாம்பியன்ஸ் டிராபி இறுதிப் போட்டியில் இந்திய அணி தோல்வியடைந்த பின்னர், அஸ்வின் மற்றும் ஜடேஜா ஆகியோர் ஒருநாள் மற்றும் டி20 போட்டிகளில் இருந்து விலகி காணப்பட்டனர்.

அவர்களுடைய இடத்தை பிடித்த குல்தீப் யாதவ் மற்றும் யுஸ்வேந்திர சாஹல் ஆகியோரே பெரும்பாலான போட்டிகளில் கலந்து கொண்டு ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்தனர். இதற்கிடையில் காயம் காரணமாக இந்திய அணியில் இருந்து ஆல்ரவுண்டர் ஹார்டிக் பாண்டியா வெளியேறினார்.

இதனை சாதகமாக பயன்படுத்திக்கொண்டு அவருக்கு பதிலாக மீண்டும் களமிறங்கிய ஜடேஜா, இந்திய அணிக்கு மிகச்சிறந்தவர் என்பதை சமீப காலங்களில் மூன்றுவிதமான போட்டிகளிலும் விளையாடி நிரூபிக்க ஆரம்பித்தார்.

2018 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆசியக் கோப்பைக்குப் பின்னர் ரசிகர்கள் அனைவரும் மீண்டும் ஜடேஜாவை ஆச்சரியத்துடன் பார்க்கும் அளவிற்கு தனது திறமையை வெளிப்படுத்தினார்.

இந்த நிலையில் இதுகுறித்து ஸ்டார் ஸ்போர்ட்ஸ் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய இங்கிலாந்து அணியின் முன்னாள் சுழற்பந்துவீச்சாளர் கிரேம் ஸ்வான், ஆஸ்திரேலியாவில் நடைபெறவிருக்கும் ரி – 20 உலகக்கிண்ணத்தில் இந்திய அணியில் ரவீந்திர ஜடேஜா பந்துவீசுவதை உலகின் எந்த அணியும் விரும்பாது எனப் பேசியுள்ளார்.

இங்கிலாந்து அணியின் பார்வையில், நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைவோம் (அவர் விளையாடவில்லை என்றால்) எனவும் அவர் கூறியுள்ளார்.



## மோட்டார் சைக்கிள் மோதி முதியவர் பலி!

யாழ்ப்பாணம், பெப். 04

கொடிகாமம் – கச்சாய் வீதியில் இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த முதியவர் சிகிச்சை பலன் இன்றி நேற்றுமுன்தினம் உயிரிழந்தார்.

கெற்பேலி மிருசுவில் பகுதியைச் சேர்ந்த வீரசிங்கம் கோபாலசிங்கம் வயது(67) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவர் ஆவார்.

கடந்த வெள்ளிக்கிழமை காலை மேற்படி முதியவர் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் தலைக்கவசம் இன்றி மோட்டார் சைக்கிள் ஓட்டி வந்த மர்ம நபர் அந்த முதியவரை மோதித் தள்ளியுள்ளார். இதில் படுகாயமடைந்த அவரை உடனடியாக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். நேற்றுமுன்தினம் காலை அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ஐ)

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

மட்டக்களப்பு, பெப். 04

மட்டக்களப்பு, காத்தான்குடிப்பிரதேசத்தில் ஒரு கிலோ 250 கிராம் கேரளக் கஞ்சாவுடன்ஒருவர்விசேட அதிரடிப்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவல் ஒன்றையடுத்து அவர்கள் நேற்று முன் தினம் கஞ்சா விற்பனை செய்பவரிடம் சென்று கஞ்சா வாங்குவதைப் போல் சிவினவியுள்ளனர்.

இந்நிலையில் அந்தச் சந்தேகநபர், கஞ்சாவை எடுத்து வந்தபோது விசேட அதிரடிப்படையினர் அவரைக் கைதுசெய்ததுடன் அவரிடம் இருந்த ஒரு கிலோ 250 கிராம் கஞ்சாவையும் பறிமுதல் செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார். (ஐ)

# சஜித்தின் தலைமையில் புதிய பெயரில் கூட்டணி

## பங்காளிக் கட்சிகள் முடிவு

ஐக்கிய தேசிய முன்னணி என்ற பெயரைத் தவிர்த்து புதிய பெயரில் கூட்டணி அமைக்கப்படும் என்றும், கூட்டணியின் பெயர், சின்னம், யாப்பு ஆகியவை இன்னமும் சில தினங்களில் அறிவிக்கப்படும் எனவும், நேற்று முன் தினம் நண்பகல் நடைபெற்ற ஐக்கிய தேசிய கூட்டணி கட்சி தலைவர்களின் கூட்டத்தில் முடிவுகள் எட்டப்பட்டுள்ளன.

இந்தக் கூட்டத்தில் எட்டப்பட்ட முடிவுகள் குறித்து ஜனநாயக மக்கள் முன்னணியின் ஊடகச் செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது –

1. ஐக்கிய தேசிய முன்னணி என்ற கூட்டணியின் தலைவராக சஜித் பிரேமதாச நியமிக்கப்பட வேண்டும் என்ற கூட்டணி கட்சிகளின் முடிவை ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு ஏற்றுக்கொண்டதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம்.

2. எதிர்வரும் பாராளுமன்ற தேர்தலில், ஒரு பரந்த கூட்டணியின் சார்பிலேயே நாம் அனைவரும் போட்டியிடுவோம். ஐக்கிய தேசிய முன்னணி என்ற பெயரை தவிர்த்து புதிய பெயரில் கூட்டணி அமைக்கப்படும். கூட்டணியின் பெயர், சின்னம், யாப்பு ஆகியவை இன்னமும் சில தினங்களில் அறிவிக்கப்படும்.

2. கூட்டணியின் பொதுச் செயலாளர் பதவிக்கு, ஐ.தே.கவின் சிரேஷ்ட உறுப்பினர்ரஞ்சித்மத்தும்பண்டாரவின் பெயரை, கூட்டத்தில் கூட்டணி தலைவர்கள் ஆராய்ந்து முடிவு செய்தனர்.

3. ஐக்கிய தேசிய முன்னணியின் தலைமைக்குழுவின் தலைவராகவும் சஜித் பிரேமதாஸ செயற்படுவார். இதில் பங்காளி கட்சிகளின் தலைவர்களும், ஐ.தே.கவின் பிரதிநிதிகளும் இடம்பெறுவர்.

4. ஒவ்வொரு பங்காளி கட்சியும் கூட்டணியுடன் புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திடும்.

5. எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பான கூட்டணியின் வேட்பாளர் நியமன சபையின் தலைவராகவும் சஜித் பிரேமதாஸ செயற்படுவார். இந்த சபையில் பங்காளி கட்சிகளின் தலைவர்களும், ஐ.தே.கவின் பிரதிநிதிகளும் இடம்பெறுவர்.

6. இன்றைய ஐக்கிய தேசிய முன்னணியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மீண்டும் நியமனம் வழங்கப்படும். ஒவ்வொரு பங்காளி கட்சியும் 2015ஆம் வருட தேர்தலில் பெற்றுக்கொண்ட நியமனங்களை மீண்டும் பெற்றுக்கொள்ளும். மேலதிக வேட்பாளர் நியமனங்கள் தொடர்பில் பேச்சுக்களின் அடிப்படையில் முடிவு செய்யப்படும்.

7. ஐ.தே.க. மற்றும் பங்காளி கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் நாடாளுமன்றத்தில், கூட்டணி உறுப்பினர்களாகச் செயற்படுவார்கள். ஒவ்வொரு கட்சியின் உறுப்பினரும் குறிப்பிட்ட கட்சிகளின் ஒழுங்கு கோவையின் கீழ் செயற்படுவார்கள். ஒரு கட்சியினால் ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்ட ஒரு அங்கத்தவரை இன்னொருபங்காளிகட்சிஎந்தசந்தர்ப்பத்திலும் உள்வாங்க முடியாது. (ஐ)

## பெப்ரவரி 14 இளைஞர் நாடாளுமன்ற தேர்தல்!

கொழும்பு, பெப். 04

இலங்கை இளைஞர் நாடாளுமன்றத் தேர்தல் இந்த மாதம் 14 திகதி நாடு தழுவிய ரீதியில் நடைபெறவுள்ளது. ஒரு பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து ஒரு இளைஞர் நாடாளுமன்ற பிரதிநிதிக்கு இம்முறை சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

வேட்பாளர்கள் எதிர்வரும் 7 ஆம் திகதி மற்றும் 8 ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை மாவட்ட செயலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்ய முடியும்.

இளைஞர் கழக அங்கத்தவர் மற்றும் அங்கத்துவர் இல்லாத இலங்கைப் பிரஜை எவரும் தேர்தலில் வாக்காளராகவோ வேட்பாளராகவோ தம்மைப் பதிவு செய்து கொள்ள முடியும்.

வேட்பாளருக்குரியவயதெல்லை 18 தொடக்கம் 27 வயது வரையாகும். (1992.12.31 க்கு பின் 2001.12.31க்கு முன் பிறந்தவராக இருக்க வேண்டும்).

வாக்காளர் 15 தொடக்கம் 29 வயதிற்குட்பட்டவராக இருக்க முடியும்.

வாக்களிப்புக்கு வருகை தரும் போது கட்டாயம் தேசிய அடையாள அட்டை அல்லது சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருக்க வேண்டும்.

தேசிய அடையாள அட்டை இல்லாத 15 முதல் - 18 வயதுடையோர் இளைஞர் கழக அடையாள அட்டை வைத்திருப்பின் வாக்களிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## நாடு திரும்பினார் பஸில்!

கொழும்பு, பெப். 04

ஓய்வுக்காக அமெரிக்கா சென்றிருந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ நேற்றுக் காலை நாடு திரும்பினார்.

விமான நிலையத்தில் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் அவரை வரவேற்றனர்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலுக்கான கட்சி நடவடிக்கைளை அவர் இந்த வாரம் முன்னெடுப்பாரென அறியமுடிந்தது. (ஐ)





## தமிழில் தேசிய கீதம் இசைப்பதில்லை என்பது பேரினவாதிகளைத் திருப்திப்படுத்தும் முயற்சி



### ரிஷாத் பதியுதீன் குற்றச்சாட்டு

மன்னார், பெப். 04

சுதந்திர தினத்தன்று தமிழ் மொழியில் தேசிய கீதம் இசைக்கப்போவதில்லை என்பது பெருமையுடனும் பெரும்பான்மை இனத்தை திருப்திப்படுத்தும் செயற்பாடு என முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு செய்பவர்கள், தமிழ் பேசும் சமூகத்துக்கும் தமிழுக்கும் எவ்வாறு அந்தஸ்தை வழங்கப் போகிறார்கள் என அவர் கேள்வியெழுப்பினார்.

மன்னார், முசலி பிரதேசத்தில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மக்கள் கலந்துரையாடலில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில் –

அரசமைப்பில் தமிழும் சிங்களமும் அரச கரும மொழியாகும் என ஏற்றுக்கொள்ளப்பட்ட போதும், இந்த அரசு தமிழை இரண்டாந்தர மொழியாக வேண்டாவெறுப்புள்ள மொழியாக நோக்குகின்றது.

இதனால் காலாகாலமாக இருந்துவந்த சம்பிரதாயங்களையும் நடைமுறைகளையும் தடை செய்து, தமிழ் மொழியை இருட்டடிப்புச் செய்வதன் உள்நோக்கம்தான் என்ன?

ஒவ்வொரு காரியத்திலும் பேரினவாதிகளை திருப்திப்படுத்துவதன் மூலம், பொதுத் தேர்தலிலும் வாக்குகளை அதிகரிக்கச் செய்து தமது கட்சிக்கான பிரதிநிதிகளை அதிகரிக்கவே திட்டம் தீட்டுகின்றார்கள்.

சிறுபான்மைச் சமூகத்தின் பிரதிநிதித்துவத்தைக் குறைப்பதும் அதன்மூலம் அந்த மக்கள் சார்ந்த பிரதேசங்களில் பெரும்பான்மை கட்சிகளுக்குச் சார்பான பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கும் நோக்கிலுமே தரகர்களையும் களமிறக்கியுள்ளனர்.

சிறுபான்மைச் சமூகத்தை அடக்கி ஒடுக்க வேண்டுமென்ற அவர்களின் நிகழ்ச்சி நிரலை நாம் தெளிவாகக் கண்டோம். எனவே, அற்பசொற்ப சலுகைகளுக்காகவும் இலாபங்களுக்காகவும் மக்கள் ஏமாந்துவிட வேண்டாம் – என்றார். (ஐ)

## மனைவியைக் கொலை செய்த கணவன் பொலிஸாரால் கைது

கொழும்பு, பெப். 04

கொத்மலை கெரடி எல்ல பகுதியில் ஆண் ஒருவரினால் பெண் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

அந்தப் பெண்ணின் கணவனே இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளார் எனக் கொத்மலை பொலிஸார் தெரிவித்தனர்.

கணவன், மனைவி ஆகிய இருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றிய நிலையில் நேற்று முன் தினம் மாலை 6 மணியளவில் இந்தக் கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

45 வயதான பெண் ஒருவரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார். கொலையை புரிந்தவர் கைது செய்யப்பட்டுள் ளார் எனத் தெரிவிக்கும் கொத்மலைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளையும் முன்னெடுத்துள்ளனர்.

# இளையோருக்கும், பெண்களுக்கும் தேர்தலில் வாய்ப்பளிக்க வேண்டும்

## சுமந்திரனின் கருத்தை வரவேற்கிறார் சித்தார்த்தன்



கொழும்பு, பெப். 04

இளையவர்களுக்கும், பெண்களுக்கும் நாடாளுமன்ற தேர்தலில் வாய்ப்பளிக்கவேண்டுமென சுமந்திரன் இப்போது சொல்வதை ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ளார் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் (புளொட்) தலைவர் த.சித்தார்த்தன்.

சுமந்திரன் இதைப்பற்றி பேச ஆரம்பிக்க முன்னரே, தமது தரப்பில் இளைஞர் ஒருவர் களமிறக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலில் இளையவர்களுக்கு வாய்ப்பளித்து, தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒதுங்கவேண்டுமென எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்து வரும் கருத்து தொடர்பாக, த.சித்தார்த்தனிடம் வினவியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

இளையவர்களுக்கும், பெண்களுக்கும் வாய்ப்பளிக்க வேண்டுமெனச் சுமந்திரன் சொல்வதை நானும் ஆதரிக்கிறேன். ஆனால், அதற்கு ஒரு பொறிமுறை அவசியம். தற்போதுள்ள எம்.பிக்கள் அனைவரும் விலகி, முற்றிலும் இளையவர்களைக் களமிறக்க முடியாது. அனுபவமிக்கவர்கள், பெண்கள், இளையவர்கள் ஒரு சரியான கலவையாக அமைய வேண்டும்.

ஏற்கனவே, ஐந்து எம்.பிக்கள் இருக்கும் நிலையில், அந்த ஐந்து எம்.பிக்களுடன், ஐந்து புதிய முகங்களை இறக்கலாம். அதில் இளையவர்களும், பெண்களும் அடங்கவேண்டும். இதில் ஏற்கனவே உள்ள எம்.பிக்கள் சிலர் தோல்வியடையலாம். அல்லது அடுத்த முறை அவர்கள் ஒதுங்க வேண்டும். அந்த இடங்களுக்கும் புதியவர்கள் நியமிக்கப்படவேண்டும். இது ஒவ்வொரு தேர்தலிலும் முறைப்படி ஒரு சுற்றாக இடம்பெற வேண்டும்.

இளையவர்களுக்கும், பெண்களுக்கும் வாய்ப்பளிக்க வேண்டுமென்பது தான் எமது நீண்டநாள் எதிர்பார்ப்பு. எனினும், எமக்கு யாழில் இரண்டு வேட்பாளர்கள் மட்டும்தான் ஒதுக்கப்பட்டனர். இதற்காக இளையவர் ஒருவரை நாம் நீண்டநாளாக தயார்ப்படுத்தி வைத்துள்ளோம்.

அதேபோல, ரெலோவும் இளையவர் ஒருவரை களமிறக்குகிறது. ஆகவே எஞ்சியுள்ள 3 வெற்றிடங்களுக்கும் தமிழ் அரசுக் கட்சி 3 பெண்களை களமிறக்கினால், மிகச்சரியான கலவையாக இருக்கும். பெண்களுக்கும் சம அங்கத்துவம் வழங்கவேண்டுமென்ற சுமந்திரனின் எதிர்பார்ப்பும் பூர்த்தியாகும். எமது எதிர்பார்ப்பும் பூர்த்தியாகும் – என்றார். (ஐ)

## காணாமல் ஆக்கப்பட்டோர் எங்கே? வெளிப்படுத்த கோருகின்றது ஐ.நா.



கொழும்பு, பெப். 04

காணாமல்போனோருக்கு என்ன நடந்தது என்பதை இலங்கை உடன் வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் வலியுறுத்தியுள்ளார்.

அவர் தனது டுவிட்டர் பக்கத்தில், காணாமல்போனோரின் உறவுகளுக்கான பதிலை பெற்றுக்கொடுப்பதற்கான முக்கிய பணியை செய்து வரும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தினரைச் சந்தித்தேன். இலங்கையில் காணாமல்போனோருக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்தவேண்டும் என்றும், அது குறித்து விசாரணைகளை தொடர்ந்து முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும், இழப்பீடுகள் வழங்கப்பட வேண்டும் என்றுமே ஐக்கிய நாடுகள் சபையும் உலக நாடுகளும் வலியுறுத்தி வருகின்றன எனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ)



# சுவிற்ஸர்லாந்துக்கான புதிய தூதுவர் ஆயுதக் குழுவொன்றின் உறுப்பினர்

## சர்வதேச அமைப்பு குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 04

சுவிற்சர்லாந்துக்கான இலங்கையின் புதிய தூதுவராக சி. ஏ சந்திரப்பெரும நியமிக்கப்பட்டுள்ளமை குறித்து கரிசனை வெளியிட்டுள்ள சர்வதேச அமைப்பொன்று, புதிய தூதுவரின் நியமனத்தை சுவிஸ் ஏற்றுக்கொள்ளக்கூடாது எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

1980களின் பிற்பகுதியில் இலங்கையின் தென்பகுதியில் மனித உரிமைச் சட்டத்தரணிகள், பத்திரிகையாளர்கள், மாணவர்கள் உட்பட நூற்றுக்கணக்கானவர்களைக் கொலை செய்த ஆயுதக்கும்பலின் உறுப்பினராக சந்திரப்பெரும காணப்பட்டார் எனச் சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பு குற்றம்சாட்டியுள்ளது.

அவ்வேளை தடி பிரியந்த என அழைக்கப்பட்ட சந்திரப்பெரும, இலங்கை இராணுவத்துடன் இணைந்து செயற்பட்டுச் சிங்கள இளைஞர்களின் எழுச்சியை ஒடுக்கிய ஆயுதக் குழுவான மக்கள் புரட்சிகரச் செம்படையின் உறுப்பினராகக் காணப்பட்டார் எனச் சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.



இலங்கை இராணுவத்துடன் இணைந்து செயற்பட்ட இந்த ஆயுதக் குழு பத்திரிகையாளர்கள், சர்வதேச மன்னிப்புச் சபையின் பணியாளர்கள் உட்பட மனித உரிமை ஆர்வலர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுப்பது வழமை என சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.


1988 இல் மனித உரிமைச் சட்டத்தரணிகளான சரித்த லங்காபுர, காஞ்ஞான அப்ஹயபால ஆகியோரின் கொலைகள் தொடர்பில் சந்திரபெரும 2000 ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டார் எனவும் அந்தச் சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் சந்திரப்பெருமவே கொலையாளி எனக் குறிப்பிட்டுள்ள சத்தியக் கடதாசியுள்ளது எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

எனினும் சந்திரபெருமவுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான ஆதாரங்கள் எதுவுமில்லை என்ற அடிப்படையில் சட்டமா அதிபர் திணைக்களம் விடுவித்திருந்தது. அதன் பின்னர் அவர் அனைத்து அரசியல் கட்சிகளுடனும் நெருக்கத்தை ஏற்படுத்தினார். இதன் காரணமாகப் பாதுகாக்கப்பட்டார் எனச் சர்வதேச அமைப்பு கூறியுள்ளது.

துணிச்சலான மனித உரிமைப் பணியாளர்களைக் கொலை செய்தமைக்காக விசாரணைக்கு உட்படுத்தப்படாத நபர் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையைப் பிரதிநித்துவப் படுத்தப் போகின்றமை ஏற்றுக்கொள்ள முடியாத விடயமாகக் காணப்படுகின்றது என சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

மனித உரிமை பேரவையின் அமர்வுகளில் கலந்துகொள்ளும் மனித உரிமை ஆர்வலர்களை அச்சுறுத்தும் வரலாறு இலங்கைக்கு உள்ளது எனக் குறிப்பிட்டுள்ள அவர், சந்திரப்பெரும போன்ற




நபர் ஒருவர் ஜெனீவா தூதரகத்திற்கு தலைமை தாங்குவது பாதுகாப்பற்றது எனவும் குறிப்பிட்டுள்ளார்.

சமீப காலங்களில் சந்திரப்பெரும பத்திரிகையாளராக மாறினார். 2012 இல் இவர் இலங்கையின் போர்க்குற்றங்களைத் திட்டமிட்ட வகையில் மறைக்கும் தற்போதைய ஜனாதிபதியின் வாழ்க்கை வரலாற்றை எழுதினார் எனவும் சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

# கிணற்றில் தவறி வீழ்ந்து சிறுமி பரிதாப உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், பெப். 04

அச்சுவேலி வல்லைப் பகுதியில் வீடொன்றில் உள்ள பாதுகாப்பற்ற கிணற்றில் தவறி வீழ்ந்து 5 வயதுச் சிறுமி உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன் தினம் (ஞாயிற்றுக்கிழமை) மாலை இடம்பெற்றது. ஜெகதீஸ்வரன் அட்சயா (வயது 5) என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்தார்.

வெளி முற்றத்தில் விளையாடிக் கொண்டிருந்த சிறுமி திடீரென காணாமற்போயுள்ளார். வீட்டில் இருந்தவர்கள் சிறுமியைத் தேடியபோது பாதுகாப்பற்ற கிணற்றில் வீழ்ந்து காணப்பட்டார்.

உறவினர்கள் சிறுமியை மீட்டு அச்சுவேலி பிரதேச வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று அனுமதித்தனர். எனினும் சிறுமி ஏற்கனவே உயிரிழந்துவிட்டார் என மருத்துவர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுமியின் சடலம் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தச் சிறுமி கடந்த மழைக்காலத்தின் போது கிணற்றில் வீழ்ந்த நிலையில் உறவினர்களால் மீட்கப்பட்டு காப்பாற்றப்பட்டவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

New Syllabus 2020
Phoenix's English Work /grade - 5, Price Rs. 290/=
By.j.Myuras, Released. Available at all Leading Book Shops Island Wide. Phoenix Publishers, 136/1 - E, Dam Street, Colombo -12.
Phone : 0112338661/ 0777319475/ 0776648526

# கூட்டணிச் செயலாளர் நாயகம் தெரிவில் ரணில் – சஜித் இழுபறி!



சஜித் பிரேமதாஸ தலைமையில் அமையவுள்ள அரசியல் கூட்டணியில் செயலாளர் நாயகமாக யாரை நியமிப்பது என்பதில் இழுபறி நிலைமை ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டாரவை புதிய கூட்டணியின் செயலாளர்நாயகமாக நியமிக்க சஜித் தரப்பு தீர்மானித்துள்ளது.

ஆனால் ரஞ்சித் மத்துமபண்டார, கபீர் ஹாஷிம் ,திஸ்ஸ அத்தநாயக்க, சுஜீவ சேனசிங்க, நளின் பண்டார, அஜித் பி பெரேரா ஆகியோரைச் செயலாளர் நாயகம் பதவியில் அமர்த்த கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள ரணில் தனது எதிர்ப்பை சஜித் பிரேமதாஸவிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கூட்டணியின் செயலாளர் நாயகமாக ரவி கருணாநாயக்க அல்லது நவீன் திசாநாயக்க ஆகிய இருவரில் ஒருவரை நியமிக்குமாறு வேண்டுகோள் விடுத்துள்ள ரணில், எதிர்வரும் தேர்தலுக்கு வேட்பாளர்களை தெரிவு செய்யும்போது பாரபட்சம் நடந்துவிடாமல் இருக்க இது உதவுமெனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேசமயம் ரணிலின் இந்தக் கோரிக்கையை சஜித் தரப்பு நிராகரித்துள்ளதால் இந்த விடயத்தில் இழுபறி நிலைமை ஏற்பட்டுள்ளது.

ரணிலின் கோரிக்கையை சஜித் தரப்பு ஏற்காத பட்சத்தில் கூட்டணியில் சேரும் யோசனையை மீள்பரிசீலனை செய்யவேண்டிவருமென ரணில் கட்சி முக்கியஸ்தர்களிடம் தெரிவித்திருப்பதாகவும் அறியமுடிந்தது. (ஐ)

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை
ஆகாய மற்றும் கடல் மார்க்கமாக அதி விரைவு, விரைவு, சிக்கனப் பொதிகள் சேவை, கடலுணவு, இறைச்சி, எண்ணெய் வகை, மருந்துப் பொருள்கள், பழ வகைகள், பால் மா வகைகள் என்பனவற்றையும் அனுப்பிக் கொள்ள முடியும். நியாயமான கட்டணத்தில் நிறைந்த சேவை.


20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கை வென்ற நாம்
அருள்ஸ் [பிறைவேற்] லிமிட்டெட்
இல.10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536
நெல்லியடியில் – இல.01, பெற்றோல் செற்லேன், நெல்லியடி. 076 443 1576
சாவகச்சேரியில் – இல.01, NDB வங்கிக் கட்டடம், தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.02.2020 இல் வெளியிடப்பெற்றது.

# ஸ்ரீ லங்காவின் சுதந்திர தினம் தமிழ்மக்களுக்குக் கரிநாள்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.04

சிறீலங்காவின் சுதந்திரதினம் தமிழ்த் தேசத்திற்குக் கரிநாளாகும்.

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையின் இன்றைய சுதந்திர தினத்தை ஒட்டி அந்த அமைப்பு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :–

சிறீலங்கா அரசானது தனது 72ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடுகினற்து. பிரித்தானியர்களிடமிருந்து சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்ட சிறீலங்கா அரசானது கடந்த 72வருடங்களாக இலங்கைத்தீவிலுள்ள தமிழர்களை உயிருடன் அழித்தல் அல்லது தமிழ்த் தேசத்தின் தாங்கு தூண்களான மொழி, கலாசாரம், பொருளாதாரம், கல்வி, நில ஆதிக்கம் போனற்வற்றின் மீதான கட்டமைப்பு சார் இனவழிப்பை மறைமுகமாகவும், நேரடியாகவும் மேற்கொண்டு வருகின்றது. அக் கட்டமைப்புசார் இனவழிப்புச் செயற்பாடுகளை தொடர்ச்சியாக அரங்கேற்றும் வகையிலேயே அரச கட்டமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த அரச கட்டமைப்பு ஊடாகவே தமிழ்த் தேசத்தின் மீது இனவழிப்பு அரங்கேற்றப்பட்டுள்ளது. இந்த இனவழிப்பு வேலைத்திட்டத்தினை முன்னெடுப்பதற்கு சிறீலங்கா ஆயுதப் படைகளே மிகப்பெருமளவில் பங்காற்றியுள்ளன. தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காகவே கணமூடித்தனமாகவும், யுத்த விதிகளை மீறியும், இரசாயன கொத்துக் குண்டுகளை வீசியும், உயிரிழப்புக்களையும், பொருளாதார அழிப்புக்களையும், சிறீலங்கா ஆயுதப்படைகள் மேற்கொண்டிருந்தன. இதன் மூலமாகவே தமிழ் மக்களின் உரிமைக்கான ஆயுதப் போராட்டம் மௌனிக்கப்பட்டது.

இனவழிப்புச் செய்த சிறீலங்கா இராணுவம் எந்தவொரு கட்சிக்கும் சொந்தமானதல்ல. மாறாக, அது அனைத்துச் சிங்கள கட்சிகளினதும் ஆதரவு பெற்றேயிருந்தது. எந்ததவொரு பேரினவாதக் கட்சி ஆட்சி அமைத்தாலும், மாறி மாறிவரும் ஆட்சியாளர்கள் சிங்கள பௌத்த மனநிலையில் இருந்து கொண்டே தமிழரை அழிக்கும் செயற்பாட்டினை மேற்கொணடு வந்திருந்தனர். அத்துடன், சகல சிங்களக் கட்சிகளும் சிறீலங்கா இராணுவத்தைப் பாதுகாக்கவே முனைந்து நின்றன.

இத்தகைய சிங்கள பௌத்த மனநிலை கொண்ட சிங்கள பேரினாவாத அரசினால் கொண்டாடப்படும் தினமாகவே பெப்ரவரி 04 ஆம் திகதிய சுதந்திரதினம் அமைந்துள்ளது. தமிழினத்தை அழித்து, அடிமைப்படுத்தி, இலங்கையைத் தனிச் சிங்கள பௌத்த தேசமாகக் கருதி, சிங்கள,பௌத்தம் கொண்டாடும் சுந்திரதிர நாளை அதற்கு எதிர்மாறாகவே பாதிக்கப்பட்ட தமிழத் தேசம் கடந்த 72 ஆண்டுகளாக கறுப்பு நாளாகக் கடைப்பிடித்து வருகினற்து.

எமது தேசத்தின் மீதான அடககுமுறை நீங்கி, தமிழ்த் தேசத்திற்கான அங்கீகாரம் கிடைக்கும் வரை தமிழினம் தொடர்ந்தும் சிங்கள தேசத்தின் சுதந்திரநாளை புறக்கணித்து, கரிநாளாகக் கடைப்பிடிககுமாறு வேணடுகின்றோம்.

இந்த அடிப்படையின் தொடர்ச்சியாக, மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட ஒரு தரப்பாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் காணப்படுகின்றார்கள். அவர்கள் தமது உறவுகளுக்கு நீதி கோரி, இக் கறுப்பு நாளில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நடத்தும் கவனவீர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்க வேணடியது அனைத்துத் தமிழ் மக்களதும் தார்மீகக் கடமையாகும்.

எனவே வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் ஏற்பாட்டில

04.02.2020 (செவ்வாய்க் கிழமை) அன்று கிளிநொச்சி கந்தசாமி கோவில் முன்றலிலும், மட்டக்களப்பு கல்லடிப் பாலத்தடியில் ஆரம்பமாகி நடைபெறும் கவனவீர்ப்புப் போராட்டத்திற்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினராகிய எமது பூரணமான ஆதரவைத் தெரிவித்துக் கொள்கின்றமையுடன், அனைத்துப் பொது மக்களையும் மேற்படி பேராட்டத்தில் கலந்துகொண்டு பூரண ஆதரவு வழுங்குமாறும் வேணடுகோள் விடுக்கின்றோம்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்,

கட்சியின் பொதுச் செயலாளர் செ.கஜேந்திரன் ஆகியோரின் ஒப்பத்தோடு நேற்று வெளியான அறிக்கையிலேயே இவ்விடயம் தெருவிக்கப்பட்டுள்ளது.

# வெள்ளி ஆண்டில் காலடி பதிக்கும்




IIS CITY CAMPUS

வட இலங்கையிலே தனியார் உயர்கல்வித்துறையில் தனது காத்திரமான பங்களிப்பை வழங்கி வரும் IIS நிறுவனம் 04.02.2020 இல் தனது வெள்ளி விழா ஆண்டில் தடம் பதிக்கின்றது.

பாரிய இடப் பெயர்வுடன் கூடிய யுத்த மேகங்கள் சூழ்ந்திருந்த வேளையிலே 1996ம் ஆண்டு மாசி மாதம் 04ம் திகதி வட பகுதி இளைஞர் யுவதிகளின் தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினி விஞ்ஞானம் சார் அறிவுப் பசியினைத் தீர்ப்பதற்கும் உலகத்தை தன்ன கத்தே கொண்டிருந்த இத் தொழில்நுட்பத்தின் பால் மாண வர்களை அழைத்துச் செல்வதற்கும் IIS இன் உருவாக்கமானது ஒரு வரப்பிரசாதமாக அமைந்திருந்தது.


கணினி நிறுவனமாக தோற்றம் பெற்ற IIS பிரித்தானிய பல்கலைக்கழகம் மற்றும் கொழும்பு பல்கலைக் கழகம் போன்றவற்றின் இளமாணிக் கற்கை நெறிகளை கணினி விஞ்ஞானம் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகளில் வட பகுதி மாணவர்கள் கற்றுக் கொள்ளக் கூடிய வகையில் வாய்ப்பினை வழங்கியதோடு பட்டக் கல்வியை. வழங்கக் கூடிய ஓர் தனியார் உயர்கல்வி வளாகமாகவும் பரிணாமம் பெற்றது. தொடர்ந்து பிராந்தியத்தின் தேவையை கருத்தில் கொண்டு மாணவர்களிற்கு குடிசார் பொறியியல் மற்றும் வியாபார முகாமைத்துவத் துறைகளில் பட்டக்கல்வியினை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்புக்களையும் உருவாக்கிக் கொடுத்தது. அதுமட்டுமல்லாது வியாபார முகாமைத்துவத்துறையிலே முதுமாணிக் கற்கை நெறியையும் மேற்கொள்ளக் கூடிய வாய்ப்பினை IIS உருவாக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

IIS இனால் வழங்கப்படுகின்ற உயர்தேசிய டிப்ளோமா மற்றும் முதுமாணி, இளமாணி கற்கை நெறிகள் அனைத்தும் அரசின் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினாலும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினாலும் அங்கீகரிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

காலத்தின் தேவையறிந்து IIS நிறுவனம் உயர்கல்வியின் பால் ஆர்வமுள்ள வறிய மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு விசேட கட்டணச் சலுகையில் வசதிகளை ஏற்படுத்தி கொடுத்து வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஆரம்பம் முதல் தனது கன்னியமான சேவையால் மாணவர்கள் மனதை வென்ற IIS நிறுவனம் இன்றும் தனக்கே மிடுக்கான தனித்துவத்துடன் வீறுநடை போடுகின்றது.

மேலும், எமது 25ஆவது வெள்ளிவிழா கொண்டாட்டங்களை முன்னிட்டு பல்வேறு சமூக நலத்திட்டங்களை இவ் ஆண்டு முழுவதும் மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. IIS இன் 25வது வெள்ளி விழா கொண்டாட்ட நிகழ்வுகள் 04.02.2020 அன்று சமய வழிபாடுகளோடு ஆரம்பிக்கப்பட்டு இந் நிகழ்வின் ஆரம்பக் கொண்டாட்டம் 25.02.2020 IIS City Campus சிவன் பண்ணை வீதியில் அமைந்துள்ள வளாகத்தில் விமர்சையாக இடம்பெறவுள்ளது. தொடர்ந்து ஆண்டு முழுவதும் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற்று 04.02.2021-ம் திகதி மிகப்பிரமாண்ட அளவில் இவ் வெள்ளிவிழாக் கொண்டாட்ட நிறைவு நிகழ்வுகள் இடம் பெற இருக்கின்றது.

# பாதுகாப்புச் செயலருடன் ரஷ்யத் தளபதி சந்திப்பு!







கொழும்பு, பெப். 04

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ரஷ்ய இராணுவத் தளபதி ஜெனரல் ஒலேக் சல்யகோவ், பாதுகாப்புச் செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்னவை நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது இரு நாடுகளுக்கும் இடையில் நிலவும் நல்லிணக்கம் மற்றும் புரிந்துணர்வை மேம்படுத்தும் விடயங்கள் தொடர்பாகவும், பிராந்திய மற்றும் தேசிய பாதுகாப்பு தொடர்பான விடயங்களை பற்றியும் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. சந்திப்பின் நிறைவில் அந்தச் சந்திப்பை நினைவுபடுத்தும் முகமாக இருவருக்கும் இடையில் நினைவுச் சின்னங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன. (ஐ)